Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

SATURDAY, AUGUST 6, 2022

சனிக்கிழமை ஒகஸ்ட் 6, 2022 | ஒளி: 06 கதிர் 069 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# சனி, ஞாயிறு மின்வெட்டு இல்லை

**இன்று 6 ஆம் திகதி சனிக்கிழமையும், நாளை 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் மின்வெட்டு அமுல்படுத்தப்படாது என்று இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

# அமைச்சுப்பதவிக்கான போட்டி சூடுபிடிக்கிறது

**சர்வகட்சி அரசாங்கத்தில் ஏழுபேருக்கு புதிதாக அமைச்சுப்பதவி**

**முஸ்லிம், மலையக கட்சிகளின் பிரதிநிதிகளும் உள்வாங்கப்படுவர்**

**பிரதான எதிர்க்கட்சியின் நால்வர் இணைய இணக்கமாம்**

*ஆர்.யசி*

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கும் தீவிர முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், அடுத்த வாரத்தில் அதற்கான சாதகமான தீர்மானங்கள் எட்டப்படுமென ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்தது.

இந்நிலையில் தற்போதைய அமைச்சரவையை மேலும் விஸ்தரிப்பது குறித்து ஜனாதிபதி தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும்,

தொடர்ச்சி P2

## தனியார் பேருந்துகளின் பணிப்பகிஷ்கரிப்பு சட்டவிரோதமானது



நெருக்கடியான இன்றைய சூழ்நிலையில் மக்களின் நிலைமைகளை கருத்தில் கொள்ளாது தனியார் பேருந்துகள் வலுக்கட்டாயமாக பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதும் சட்ட விரோதமான செயற்பாடாகவே கருதுகின்றோம் என போக்குவரத்துத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

"கோட்டா கோ கம" கூடாரங்கள்

# ஒகஸ்ட் 10 வரை அகற்றப்படாது



காலி முகத்திடல் "கோட்டா கோ கம" போராட்டக்களத்தில் உள்ள சட்டவிரோத கூடாரங்கள் உரிய சட்ட நடவடிக்கைகளின்றி ஒகஸ்ட் 10 ஆம் திகதி வரை அகற்றப்படுவதை தடுப்பதாக சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு உறுதி வழங்கியுள்ளார்.

பொலிஸாரால் விடுக்கப்பட்ட பணிப்புரையை வலுவிழக்கச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று (05) பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே சட்டமா அதிபரால் இந்த உறுதியுரை வழங்கப்பட்டது.

தொடர்ச்சி P2

# ஐ.எம்.எப் யை தவிர்த்து மாற்றுவழி ஏதுமில்லை

**மாற்றுத்தீர்வு இருந்தால் முன்வையுங்கள் என்கிறார் ஜனாதிபதி**


இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதாயின் சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கைக்கு இணக்கம் தெரிவித்தாக வேண்டும். அதனை செய்யாது பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வது சாத்தியமில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதை தவறென்றால் எந்தவொரு பாராளுமன்ற எம்.பியேனும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தால், இதற்கான மாற்றுவழிமுறை என்ன என்பதையும் முன்வைக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2




## கண்டி சிறுவனை கடத்தியவர் கைது




கொழும்பில் இருந்து அவிசாவளை நோக்கிச் சென்ற புகையிரதத்தில், கண்டியைச் சேர்ந்த 9 வயதுடைய சிறுவனை நபரொருவர் கடத்திச் சென்ற போது பொதுமக்களிடம் சிக்கிக்கொண்டார்.

தொடர்ச்சி P2

# இனந்தெரியாத குவிந்து கிடக்கும் சடலங்களால் பெரும் நெருக்கடி

நாடளாவிய ரீதியில் அரச வைத்தியசாலைகளில் குவிந்து கிடக்கும் அடையாளம் தெரியாத சடலங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய சட்ட நடவடிக்கைகள் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க சுகாதார அமைச்சுக்கும், பொலிஸாருக்கும் பணிப்புரை விடுப்பதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.


தொடர்ச்சி P2



## கட்டிலில் படுத்து கர்ஜித்த சிறுத்தை

வீட்டுக்குள் சிக்கிக்கொண்ட சிறுத்தையை வனஇலாக அதிகாரிகளும், பொலிஸாரும் இணைந்து மடக்கிப் பிடித்துள்ள சம்பவம் லிந்துலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட லோகி கூம்வூட் தோட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2





## வருகிறார் கோட்டா

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அடுத்தவாரம் வியாழக்கிழமை (11) இலங்கைக்கு வரவுள்ளதாக தெரிய வருகின்றது.

தற்போது சிங்கப்பூரில் தங்கியுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவுக்கான வீசா காலம் எதிர்வரும் 14 ஆம் திகதியுடன் முடிவுக்கு வருகின்றது. இந்நிலையில் அதற்கு மூன்று தினங்களுக்கு முன்னதாகவே அவர் இலங்கைக்கு வரவுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், அவர் இலங்கைக்கு வந்தவுடன் எங்கு தங்கப்போகின்றார் என்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கப்படவில்லையாம்,

தொடர்ச்சி P2

## மக்களுக்கான உதவிகள் தொடரும்

**அமெரிக்க இராஜாங்க செயலாளர் பிளிங்கென் தெரிவிப்பு**

இலங்கையில் பொருளாதார நெருக்கடி நிலைமைகளுக்கு முகங்கொடுத்துள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கும் செயற்பாடுகளில் அமெரிக்கா ஆதரவை வழங்கும் என அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கென் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## 3 நாட்கள் பாடசாலை

அடுத்த வாரம் திங்கட்கிழமை, செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் பாடசாலைகள் நடத்தப்பட வேண்டுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. எதிர்வரும் வியாழக்கிழமை (ஒகஸ்ட் 11) போயா விடுமுறை தினம் என்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

# கனிமொழியை சந்தித்தார் உயர்ஸ்தானிகர் மொரகொட

இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட தமிழ்நாடு தூத்துக்குடி தொகுதி மக்களவை எம்.பியான கனிமொழி கருணாநிதியை டெல்லியில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளின் போது இலங்கை மக்களுக்கு தமிழ்நாடு செய்துவரும் மனிதாபிமான உதவிகளுக்கு இலங்கை சார்பில் தமது நன்றிகளை தெரிவித்துள்ள உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, தமிழ்நாடு மற்றும் இலங்கைக்கு இடையிலான மிக நெருக்கமான இன, மத மற்றும் கலாசார தொடர்புகள் குறித்து கருத்துக்களை பரிமாறிக்கொண்டுதுடன் அவற்றை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகள் குறித்தும் கலந்துரையாடினர்.



## ஜப்பான், தென்கொரியாவின் உதவிகள் இலங்கைக்கு தேவை

**பொருளாதார ஒத்துழைப்புக்கான ஆசிய மன்றம் வலியுறுத்து**

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியை சமாளிக்க ஜப்பான் மற்றும் தென் கொரியா போன்ற நாடுகள், உதவ வேண்டுமென பொருளாதார ஒத்துழைப்புக்கான ஆசிய மன்றம் வலியுறுத்தியுள்ளது.

APEC Asia-Pacific Economic Cooperation

தொடர்ச்சி P2

## நாயை கொடூரமாக வெட்டிய 2 இளைஞர்களுக்கு விளக்கமறியல்

**மூன்றாவது நபருக்கு விளக்கமறியல்**

*செந்தூரன் பிரதீபன்*

நாயொன்றை ஈவு இரக்கம் இன்றி கொடூரமான முறையில் வெட்டி கொலை செய்து, அதன் காட்சிகளை சமூக வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்த இரண்டு இளைஞர்களையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவன் ஜெ. கஜநிதிபாலன் உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

## இந்தியா எப்போதும் இலங்கையின் நண்பன்

கம்போடியாவில் இடம்பெற்றுவரும் ஆசியான் மற்றும் இந்திய அமைச்சர் மட்ட மாநாட்டில் கலந்துகொண்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்ஷங்கரை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள புதிய அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்தும், வெளிவிவகாரத்துறை அமைச்சுப்பொறுப்பை ஏற்றுள்ள அலி சப்ரிக்கு நன்றிகளையும் தெரிவித்துள்ள எஸ்.ஜெய்ஷங்கர், இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் நல்வாழ்வுக்கான நம்பகமான நண்பராகவும் நம்பகமான பங்காளியாகவும் இந்தியாவின்





உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியதாக தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

## அரசாங்கத்தின் பதிலில் எமது முடிவு இருக்கிறது

**ஜனாதிபதியிடம் சஜித் தரப்பு எடுத்துரைப்பு**

ஜனநாயக வழியில் போராடும் சிவில் செயற்பாட்டாளர்கள், தொழிற்சங்க மற்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான அரசாங்கத்தின் வன்முறை தாக்குதல்கள் மற்றும் கைதுகள் நிறுத்தப்பட்டு ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட்டால் அதன் பின்னர் சர்வகட்சி அரசாங்கத்தில் ஒன்றிணைந்து பயணிப்பது குறித்து ஆராய முடியும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ,



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# அமைச்சுப்பதவிக்கான போட்டி சூடுபிடிக்கிறது

ஒரு சிலர் அமைச்சுப்பதவிகளை பெற்றுக்கொள்ள தீவிர ஆர்வம் காட்டி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது குறித்து கடந்த சில தினங்களாக பல கட்சிகளுடனும் ஜனாதிபதி முன்னெடுக்கும் பேச்சுவார்த்தைகள் சாதகமாக முடிவடைந்துள்ளதாக ஐ.தே.க தெரிவிக்கின்றது. சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்து செயற்பட கட்சிகள் பலவும் இணக்கம் தெரிவித்துள்ளதுடன், எதிர்க்கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் சிலரும் சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்துகொள்ள தீர்மானித்துள்ளதாகவும் அக்கட்சியின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

எனினும், சர்வகட்சி அரசாங்கம் அமையப்பெறும் போது அமைச்சரவை எண்ணிக்கை அதிகரிக்க வேண்டியுள்ளதால் தற்போது புதிதாக ஏழு அமைச்சர்களுக்கான அமைச்சுப்பதவிகள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

இந்த ஏழு அமைச்சுகளில் முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதி ஒருவருக்கும், மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பி ஒருவருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினர்கள் இருவருக்கும் அமைச்சுப்பதவிகள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேபோல் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் இருவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணிக் கட்சியாக செயற்படும் எம்.பி ஒருவருக்கும் அமைச்சுப்பதவிகளை எடுத்துக்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் நேரடியாக கோரிக்கை விடுத்துள்ளார். அது குறித்து சாதகமான பதிலை அவர்கள் வழங்கியுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

எவ்வாறு இருப்பினும் சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்துகொள்ளும் சகலருக்கும் அமைச்சுப்பதவிகளை பெற்றுக்கொடுக்க முடியாதுள்ள நிலையில் அவர்களுக்கு வேறு சலுகைகளை பெற்றுக்கொடுக்கவும் ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதியுடன் நெருக்கமான பணியாற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் உறுதிப்படுத்தினார்.

# பணிப்பகிஷ்கரிப்பு சட்டவிரோதமானது

பேருந்து கட்டண அதிகரிப்பு மற்றும் குறைப்பு தொடர்பில் அரசியல் ரீதியான தலையீடுகள் ஏற்படாது. நாட்டின் சட்டங்களுக்கு அமைய பொதுச்சேவைகள் ஆணைக்குழுவே இது குறித்து தீர்மானிக்கும். அவர்களின் தீர்மானத்துக்கு அனுமதியை வழங்குவது மட்டுமே அமைச்சரின் பணியாகும். கொவிட் காலத்தில் ஆசனங்களுக்கு ஏற்ப பயணிகளை ஏற்றிச்செல்வதற்காக பயணக்கட்டணம் அதிகரிக்கப்பட்டது. இப்போது அந்த நிலைமை இல்லை, ஆகவே பேருந்து கட்டணத்தை குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

டீசல் பெற்றுக்கொடுக்கப்பட்ட வேளையில் அதனை சட்ட விரோதமாக விற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவேதான் மட்டுப்படுத்தப்பட்ட விதத்தில் எரிபொருள் வழங்கப்படுகின்றது. இப்போது அவசரகால சட்டத்திற்கும் அமைய சகலரதும் நிலைமைகளை கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். அரசாங்கமாக செய்ய முடிந்த சகலதையும் செய்கின்றோம். தனியார் பேருந்து சங்கங்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட வேண்டாம். இது மக்களுக்கான சேவையை குழப்பும் நடவடிக்கையாகும். வலுக்கட்டாயமாக பேருந்துகளை சேவையில் இருந்து நிறுத்தினால் அதுவும் சட்ட விரோதமானதே. எனவே, முரண்பாடுகள் இருந்தால் பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் என அழைப்பு விடுத்தார்.

# ஓகஸ்ட் 10 வரை அகற்றப்படாது

இந்த விடயம் தொடர்பில் பொலிஸ்மா அதிபருக்கு தேவையான ஆலோசனைகளை விரைவில் வழங்குவதாகவும் சட்டமா அதிபர் சார்பில் மன்றில் ஆஜராகிய மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் சுமதி தர்மவர்தன மன்றின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

எவ்வாறாயினும், குறித்த காலப்பகுதிக்குள் சட்டவிரோத கூடாரங்களை அகற்றுவது தொடர்பான ஆரம்பக்கட்ட சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பிரதிவாதிகளுக்கு எவ்வித இடையூறுகளும் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

போராட்டக்களத்திலிருந்து சுயவிருப்பின் பேரில் வெளியேற விரும்பும் நபர்களுக்கு, இந்த இணக்கப்பாட்டினால் எவ்வித இடையூறுகளும் ஏற்படாதென மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

காலி முகத்திடல் போராட்டக்களத்திலிருந்து நேற்று (05) மாலை 05 மணிக்கு முன்னர் வெளியேற வேண்டுமென பொலிஸாரினால் ஒலிபெருக்கி ஊடாக அறிவுறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.எம்.எப் யை தவிர்த்து மாற்றுவழி ஏதுமில்லை

பொருளாதார மீட்சி திட்டம் குறித்து பல்வேறு தரப்பினர் பல மாற்றுக் கருத்துக்கள் தெரிவிக்கலாம். அவை சாத்தியமா, இல்லையா? என்பதை தாண்டி நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடியாக வேண்டும் என்றார்.

சகல கட்சிகளும் இதற்கு இணக்கம் தெரிவித்தாக வேண்டும். நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளில் நாம் எதிர்கொள்ள வேண்டிய முக்கிய பிரச்சினை, அரசாங்கங்கள் மாறும்போது கொள்கைகள் மாறுவதுதான். அதற்கு நாம் தயாரா என்பதைச் சிந்திக்க வேண்டும். அதை பாராளுமன்றத்தில் நிராகரித்தால் அதன் விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

எதிர்வரும் 6 மாதங்கள் மிகவும் கடினமானவையாக இருக்கும், இது நாம் ஒருபோதும் அனுபவிக்காத காலகட்டமாக இருக்கும். முதல் 6 மாதங்கள் மிகவும் கடினமானவை. இது நாம் இதற்கு முன்னர் அனுபவிக்காத ஒரு காலகட்டமாகும். ஆனால், இந்த சவால்களை நாம் கடந்து செல்ல வேண்டும். நாங்கள் திரும்பிச் செல்ல முடியாது. பழைய பொருளாதாரக் கொள்கைகளின் விளைவுதான் இன்று நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். எனவே, நாம் மீண்டும் அந்த பொறிமுறைக்குச் செல்வதில் அர்த்தமில்லை. புதிதாக சிந்திப்போம் என்றார்.

மேலும், இலங்கை அணுசக்தியை பயன்படுத்துவது குறித்தும் அணுசக்தியை இலங்கை பயன்படுத்துவது குறித்து அறிக்கையொன்றை பெற்றுக்கொள்வது குறித்து தீவிரமாக சிந்திக்கவேண்டும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.



# கட்டிலில் படுத்து கர்ஜித்த சிறுத்தை

அந்த சிறுத்தையை பார்வையிடுவதற்கு சென்றிருந்த ஒருவர், சிறுத்தையின் தாக்குதலுக்கு உள்ளான நிலையில், நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாயொன்றை வேட்டையாடுவதற்கு துரத்திக்கொண்டு வந்த சிறுத்தை, லயன் கூரையை உடைத்துக்கொண்டு அவ்வீட்டின் படுக்கை அறைக்குள் விழுந்துள்ளது. இந்த சம்பவம் நேற்று முன்தினம் (04) இரவு 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

லிந்துலை, லோகி தோட்டத்தில் இடம்பெற்ற சம்பவத்தை அடுத்து, அவ்வீட்டைச் சேர்ந்தவர்கள் பதற்றமடைந்து வீட்டிலிருந்து வெளியேறி கதவை, வீட்டுக்கு வெளியே அடைத்துக்கொண்டனர்.

சம்பவம் தொடர்பில் அவ்வீட்டின் உரிமையாளர் எஸ்.சுரேஷ் கருத்துதெரிவிக்கையில் அன்றிரவு 11.40 மணியிருக்கும், நான் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்தேன். திடீரென மின்சாரம் தடைப்பட்டது. கடும் மழையும் பெய்துக்கொண்டிருந்தது. பாரிய சத்தமொன்று கேட்டது. ஏதோ விபரீதம் என நினைத்துக்கொண்டு நானும், மனைவியும் பிள்ளைகளுடன் வீட்டை விட்டு வெளியேறிவிட்டோம்.

கர்ஜிக்கும் சத்தம் கேட்டது. அதனையடுத்து யன்னல்களின் ஊடாக பார்த்தபோது பெரிய சிறுத்தையொன்று அங்குமிங்கு நடமாடிக்கொண்டிருந்தது. அதன்பின்னரே, பொலிஸாருக்கு நாங்கள் தகவல் கொடுத்தோம் என்றார்.

சுமார் 16 மணிநேரமாக வீட்டின் கட்டிலில் அமர்ந்திந்தது மட்டுமன்றி வெளியில் பாய்வதற்கும் முயன்ற சிறுத்தையை மயக்கஊசி செலுத்தி பிடித்த வனஇலாகா அதிகாரிகள், அதனை காட்டுக்குள் விடுவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்தனர்.

# கண்டி சிறுவனை கடத்தியவர் கைது

குறித்த நபரையும், சிறுவனையும் மஹரகம புகையிரத நிலைய பொலிஸ் அதிகாரியிடம் பொதுமக்கள் ஒப்படைத்துள்ளனர்.

கொழும்பு கோட்டையிலிருந்து அவிசாவளை நோக்கி செல்லும் ரயிலில் சிறுவனை அழைத்துக்கொண்டு அந்த நபர், நேற்று முன்தினம் (4) இரவு 8.00 மணியளவில் பயணித்துக்கொண்டிருந்துள்ளார்.

ரயிலில் சிறுவன் அழுதுகொண்டே பயணித்துள்ளார். அத்துடன், அச்சிறுவனின் அருகிலிருந்த நபரின் செயற்பாடுகள் சந்தேகத்தை தோற்றுவித்துள்ளன.

இதனையடுத்து அங்கிருந்த பயணிகள், அந்நபரிடம் வினவியுள்ளனர். எனினம், முறையாக பதிலளிக்காத அவர், ரயிலில் இருந்து தப்பியோட முயன்றுள்ளார்.

அதன்பின்னர், பொலிஸாருக்கு தகவல்கொடுத்து மஹரக ரயில் நிலையத்தில் வைத்து, சிறுவனையும் அந்த நபரையும் பொலிஸாரிடம் பயணிகள் ஒப்படைத்துள்ளனர்.

சிறுவன் கண்டியை வசிப்பிடமாகக் கொண்டவர் எனவும், கடந்த சில நாட்களுக்கு முன்னர் அவர் வீட்டில் இருந்து காணாமல் போயுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# வருகிறார் கோட்டா

அது குறித்து தனது சகோதரர்களுடன் கலந்துரையாடி வருவதாகவும், அவருக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தித்தருமாறும் முன்னாள் ஜனாதிபதி கேட்டுக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விரும்பினால் தொடர்ந்தும் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட முடியும். அதற்கான பக்க பலமாக நாம் இருப்போம் என முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# நாயை கொடூரமாக வெட்டிய 2 இளைஞர்களுக்கு விளக்கமறியல்

இந்த சம்பவம், புங்குடுதீவு எட்டாம் வட்டார பகுதியிலேயே இடம்பெற்றுள்ளது. அது தொடர்பிலான காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வைரலாகியிருந்தன.

அத்துடன் தலைமறைவாகியுள்ள மூன்றாவது சந்தேக நபரையும் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு நீதவான் ஊர்காவற்துறை பொலிஸாருக்கு கட்டளையிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நீதிமன்றத்தில் பொலிஸார் முன்வைத்திருந்தனர். அந்த நபர்களின் செயலானது மக்களிடையே மனப்பிளவு மற்றும் ஆத்திரத்தினை ஏற்படுத்தி, மக்கள் மனதில் ஒரு குழப்ப நிலையை தோற்றுவிக்கும் முகமாக அமைந்திருந்தது என்றும் நீதிமன்றுக்கு அறிவித்தனர்.

பொலிஸாரின் விண்ணப்பங்களை ஏற்றுக் கொண்ட நீதவான் இந்த செயற்பாடானது ஒரு மன்னிக்க முடியாத செயற்பாடாகும். இவ்வாறு ஒரு குரூர மனநிலை கொண்டவர்கள் வெளியில் சென்றால், இதே போன்ற சம்பவங்களில் மேலும் ஈடுபட முடியும். எனவே ,சந்தேக நபர்களை விளக்க மறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

அத்துடன் அவ்விருவரையும் சிறைச்சாலை அதிகாரிகள் ஊடாக சட்ட வைத்திய அதிகாரியிடம் முற்படுத்தி, உரிய சிகிச்சை அளிக்குமாறும் நீதவான் கட்டளையிட்டார்.

# இனந்தெரியாத குவிந்து கிடக்கும் சடலங்களால் பெரும் நெருக்கடி

சுகாதார பணிப்பாளர் தலைமையிலான சுகாதார தரப்பினருக்கும் ,நீதி அமைச்சருக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ள நிலையில் இந்த விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

இனந்தெரியாத சடலங்களை அகற்ற முடியாததன் காரணமாக ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைகள் மற்றும் சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. அரசு மருத்துவமனை பிணவறையில் குறைந்தளவு இடமே காணப்படுவதுடன், அடையாளம் தெரியாத சடலங்கள் காணப்படுவதால் ஏனைய சடலங்களை அடக்கம் செய்வதில் வைத்தியசாலை அதிகாரிகள் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் திருத்தங்கள் மற்றும் அதற்கேற்ப தேவையான வழிகாட்டுதல்கள் குறித்து சுகாதார அமைச்சும், பொலிஸாரும் இந்த வழக்கை உடனடியாக சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு நீதி அமைச்சர் பணிப்புரை வழங்கினார்.

# அரசாங்கத்தின் பதிலில் எமது முடிவு இருக்கிறது

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளார். அரசாங்கத்தில் தமது பங்கேற்பின் நிலைப்பாடு, அரசாங்கத்தின் பதிலின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் எனவும் எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

சர்வகட்சி அரசாங்கத்தில் இணைவது குறித்து கலந்துரையாடும் விதமாக பிரதான எதிர்க்கட்சியுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோர் நேற்று (5) கலந்துரையாடல் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியை வெற்றிகொள்ள எதிர்க்கட்சியின் முழுமையான பங்களிப்பு அவசியம் என்பதை ஜனாதிபதி எடுத்துரைத்துள்ளார். எனினும் அரசாங்கத்தின் செயற்பாடுகள் திருப்திகரமானதாக இல்லை எனவும், ஜனநாயகத்தின் மீதான அடக்குமுறைகள் அதிகரித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ள எதிர்க்கட்சியினர், நாட்டின் ஜனநாயகம் பலப்படுத்தப்படும் விதமாக அரசாங்கம் செயற்படும் பட்சத்தில் அரசாங்கத்தின் பதிலின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் எனவும் எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

# மக்களுக்கான உதவிகள் தொடரும்

கம்போடியாவில் இடம்பெற்றுவரும் ஆசியான் மற்றும் இந்திய அமைச்சர் மட்ட மாநாட்டில் கலந்துகொண்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கெனுடன் சந்திப்பொன்றை முன்னெடுத்திருந்தார். புதிய அரசாங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் இலங்கையின் தற்போதைய நெருக்கடி நிலைமைகள் குறித்து இதன்போது கலந்துரையாடியுள்ளதுடன், பொருளாதார மீட்சிக்கு இலங்கை எடுக்கும் முயற்சிகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமைகளுக்கு முகங்கொடுத்துள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கும் செயற்பாடுகளில் அமெரிக்க ஆதரவை வழங்கும் என அமெரிக்க இராஜாங்க செயலாளர் தெரிவித்துள்ளார். மேலும் இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மையை அதிகரிக்க அமெரிக்காவின் தொடர்ச்சியான முயற்சிகளை வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தின் கீழ் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய நாடுகளுடன் நிதி ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்ளும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

# ஜப்பான், தென்கொரியாவின் உதவிகள் இலங்கைக்கு தேவை

22 மில்லியன் மக்களைக் கொண்ட இலங்கையில், முன்னொருபோதும் இல்லாத வகையில் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது. ஜூலை மாதத்தில் பணவீக்கம் 60.8 சதவீதமாக உயர்வடைந்துள்ளது. மேலும் அந்நிய செலாவணி கையிருப்புக்கு மத்தியில் உணவு, எரிபொருள் மற்றும் மருந்துகளின் கடுமையான பற்றாக்குறையை நாடு எதிர்கொண்டுள்ளது.

தற்போது இலங்கை மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். அவசர தேவை இருந்த போதிலும் சர்வதேச நாணய நிதியத்துடனான பிணை எடுப்பு ஒப்பந்தம் செய்து கொள்ள பல மாதங்கள் ஆகுமென ஆசிய மன்றம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஜப்பான் மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகள், ஆசியாவின் இரண்டாவது மற்றும் நான்காவது பெரிய பொருளாதாரத்தை கொண்டுள்ள நாடுகளாகும். இந்த நிலையில் இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும், விரைவான சீர்திருத்தங்களை மேற்கொள்ளவும், அதன் ஜனநாயக நிறுவனங்களை வலுப்படுத்தவும் உதவுவது கட்டாயம் என்று ஆசிய மன்றம் தெரிவித்துள்ளது.



# துப்பாக்கி பிரயோகங்களின் பின்னால்

ரஸீன் ரஸ்மின்

இலங்கையில் கடந;த சில தினங்களாக, அதிக அளவிலான துப்பாக்கி பிரயோக சம்பவங்கள், இனந்தெரியாத சடலங்கள் கரையொதுங்குகின்றமை போன்ற செய்திகளை ஊடகங்கள் மூலமாக அறிகின்றோம். இது பொதுமக்கள் மத்தியில் பெரும் அச்சத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கிறது.

பொருளாதார ரீதியாக மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினை காரணமாக, மக்கள் வீதியில் இறங்கி முன்னெடுத்த போராட்டங்கள் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட நிலையில், இலங்கையின் பல பகுதிகளில் இவ்வாறு துப்பாக்கிப் பிரயோக கலாசாரம் தலைதூக்கியுள்ளமை மக்களிடையே பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

நாடளாவிய ரீதியில் ஜூலை மாதம் 27ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் ஏழு பேர் உயிரிழந்துள்ளனர். கொட்டாஞ்சேனை, ரத்கம பகுதிகளில் நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டு சம்பவங்களில் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டாஞ்சேனை விவேகானந்தா வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர், சனிக்கிழமை (30) இரவு நடத்திய துப்பாக்கி பிரயோகத்தில் 51 வயதான நபரொருவர் பலியாகினார்.

காலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரத்கம, கம்மத்தேகொட பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை (31) இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில், ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதுடன், இருவர் காயமடைந்தனர். மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் ரி-56 துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச் சென்ற நிலையில், படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று ரத்கம பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் ரத்கம, தெவெனிகொட பகுதியைச் சேர்ந்த 45 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். காயமடைந்தவர்கள் 47 மற்றும் 29 வயதுடையவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ரத்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, கம்பஹா, அம்பலாங்கொடை, இரத்மலானை ஆகிய பகுதிகளில் கடந்த 27 மற்றும் 28ஆம் திகதிகளில் நடத்தப்பட வெவ்வேறு துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் ஐவர் உயிரிழந்திருந்தனர்.

இதேவேளை , கம்பஹா நீதவான் நீதிமன்றத்துக்கு முன்பாக 27ஆம் திகதி மதியம் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமடைந்த பாதாள உலகக் குழு உறுப்பினரான 'பஸ் பொட்டா' என்று அழைக்கப்படும் சமன் ரோஹித்த, அன்று மாலையும் இன்னொருவர் இரண்டு தினங்களிலும் மரணமடைந்திருந்தனர்.

**பதிவாகியுள்ள துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் மொத்தம் 21 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எஸ்.எஸ். பி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.**

**என்ன காரணங்களுக்காக நடத்தப்பட்டது என்பது கூட ஒரு கேள்விக் குறியாகவே காணப்படுகிறது**

அம்பலாங்கொடை, கலகொட பிரதேசத்தில் இடம்பெற்ற இறுதிச் சடங்கு ஒன்றில், 27ஆம் திகதி மாலை நடத்தப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் இருவர் பலியாகினர்.

இந்நிலையில், இரத்மலானை, சில்வா மாவத்தை பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் 28ஆம் திகதி அதிகாலை நுழைந்த இருவர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 30 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடத்தப்பட்ட துப்பாக்கி பிரயோகங்களுக்கும், போதைப் பொருள் வர்த்தகத்துக்கும் இடையில் தொடர்புகள் காணப்படலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், இந்தச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை நடத்தி வருவதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவிக்கின்றது. இலங்கையில் மே மாதம் 30ஆம் திகதி முதல் இன்று வரை 20 துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து பதிவாகியுள்ள துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் மொத்தம் 21 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எஸ்.எஸ்.பி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளே பெரும்பாலான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களின் பின்னணியில் இருப்பதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

நாட்டில் இடம்பெறும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் மற்றும் காலிமுகத்திடல் கடற்கரையில் கண்டெடுக்கப்பட்ட சடலங்கள் தொடர்பில் உடனடியாக முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவிடம் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, நாட்டின் பல்வேறு பகுதிகளில் அண்மைய நாள்களில் பதிவான பல நபர்களின் மரணத்திற்கு காரணமான துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் தொடர்பாக சட்டத்தரணிகள் சங்கம், பொலிஸ் மா அதிபரின் கவனத்துக்கு கொண்டுசென்றுள்ளது.

அத்துடன், கரையோரப் பகுதி களில் குறிப்பாக, காலிமுகத்திடலை அண்மித்த பகுதிகளில் சடலங்கள் கரையொதுங்குவது தொடர்பில் ஊடகங்களில் வெளியான செய்திகள் தொடர்பிலும் அச்சங்கம், பொலிஸ் மா அதிபரின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளார்.

இவை தொடர்பில் அதிகாரிகளிடமிருந்து எந்த விளக்கமும் கிடைக்காத நிலையில், இதுபோன்ற சடலங்கள் கரையொதுங்குவது பொதுமக்களின் ஒரு பிரிவினரிடையே அச்சத்தை ஏற்படுத்தியதை அவதானித்துள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

சட்டத்தை அமல்படுத்துவது தொடர்பில் பொதுமக்களின் நம்பிக்கை பேணப்படுவதையும், இலங்கையின் நற்பெயருக்கு பாதகமான பாதிப்பு ஏற்படாமல் இருப்பதையும் உறுதி செய்வதற்கு இந்த இரண்டு விடயங்கள் தொடர்பிலும் உடனடியாக விசாரணை நடத்த வேண்டியதன் அவசியத்தை பொலிஸ் மா அதிபருக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

துப்பாக்கி பயன்பாட்டால் குற்றச்செயல்கள் இடம்பெறுவது, அதுதொடர்பில் அனுபவம் உள்ளவர்களினாலேயே என்று சொல்லப்படுகிறது.

வீட்டுப் பாவனைக்காக ஒரு கத்தியைக் கூட வைத்திருக்க முடியாத ஒரு நிலைமை, இந்த நாட்டில் அண்மைக்காலங்களில் காணப்பட்ட போதிலும், இப்போது மிகவும் சர்வ சாதாரணமாக துப்பாக்கிச் சூடு நடத்தப்படுவது, மக்கள் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

ஒரு துப்பாக்கி சூடு நடத்தப்பட்டால், அது என்ன காரணங்களுக்காக நடத்தப்பட்டது என்பது கூட ஒரு கேள்விக் குறியாகவே காணப்படுகிறது.

நாம் எல்லோரும் பாதுகாப்பு மற்றும் நீதி கோரி செல்லும் நீதிமன்றத்தில் கூட பாதுகாப்பு இல்லையா என்று கேட்கும் அளவுக்கு இந்தத் துப்பாக்கி கலாசாரம் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. கல்கிஸை நீதிமன்றத்துக்குள் நேற்றுமுன்தினம் (04) இடம்பெற்ற துப்பாக்கி சூடு சம்பவம் மெய்சிலிர்க்க வைத்தது.

சட்டவிரோதமாக வைத்திருக்கும் துப்பாக்கிகளை பாதுகாப்பு தரப்பினர் பொறுப்பேற்கும் நடவடிக்கை முன்னெடுத்திருந்த போதிலும், அதன் மூலம் சிறந்த பலன் கிடைக்கவில்லை என்பது நாளுக்கு நாள் அதிகரித்துள்ள துப்பாக்கி சூட்டு சம்பவங்கள் மூலம் அவதானிக்க முடிந்துள்ளது.

எனவே, இந்த விடயத்தில் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு தரப்பினர் உரிய நடவடிக்கைகள் எடுத்து இலங்கையில் மீண்டும் தலைதூக்கும் ஆயுத கலாச்சாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பாகும்.

# திராய்க்கேணி படுகொலை தினம்

**32 ஆவது வருட நினைவேந்தல் இன்று**

வி.ரி. சகாதேவராஜா







அன்று, 1990 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஆறாம் திகதி திராய்க்கேணி எனும் தமிழ் கிராமம் இரத்த வெள்ளத்தில் மிதந்தது.

கிழக்கிலங்கையில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஒரே ஒரு தமிழ் கிராமம் திராய்க்கேணி கிராமமாகும். அங்கு 286 குடும்பங்கள் சீரும் சிறப்புமாக, நிம்மதியாக வாழ்ந்து வந்தன.

ஆனால், 1990 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஆறாம் திகதி அந்த நிம்மதிக்கும் வாழ்க்கைக்கும் இனவாதிகளால் வேட்டு வைக்கப்பட்டது. ஆம்! அங்கு நான்கு கவச வாகனங்களில் வந்தவர்கள், கிராம மக்களை கோவிலுக்கு வரவழைத்து, 54 பேரை மிகவும் கொடூரமாக, ஈவிரக்கமின்றி கத்தியாலும் கோடரியாலும் வெட்டி கொலை செய்தார்கள்.

தமது கண்களின் முன்னால் தமது உதிர உறவுகள் இரத்த வெள்ளத்தில் துடிதுடித்து இறந்ததை கண்டவர்கள், மறுகணமே உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு காரைதீவு, விநாயகபுரம் ,கிரான்குளம், மட்டக்களப்பு என்று புலம்பெயர்ந்தார்கள்.

பலர், துன்ப வேதனைகளோடு காரைதீவில் இருந்த விபுலானந்த மகா வித்தியாலய அகதி முகாமில் தஞ்சம் அடைந்தார்கள். நான்கு ஆண்டுகளுக்கு பிறகு, 1994 ஆம் ஆண்டு மீண்டும் சொந்த ஊரான திராய்க்கேணியில் குடியமர்த்தப்பட்டார்கள். ஆனால், 121 குடும்பங்கள் மாத்திரமே மீள்குடியேறின. ஏனையவர்கள் திரும்பவில்லை.

1990 காலப்பகுதியில் தலைவராக இருந்து, பின்பு படுகொலை செய்யப்பட்ட 'மயிலிப் போடி' என்பார், அப்போது சர்வதேச, உள்நாட்டு ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்தை இங்கு பதிவிடலாம். " அன்று, 1990 ஓகஸ்ட் மாதம்ஆறாம் திகதி காலை 7 மணி அளவில், அக்கரைப்பற்று பக்கத்தில் இருந்து சுமார் இருநூறு முஸ்லிம் இனவாதிகளும் சீருடை தரித்த துப்பாக்கி ஏந்திய படையினரும் கவச வாகனத்தில் வந்தார்கள். அவர்கள் வீடு வீடாகச் வந்து, பிள்ளையார் ஆலயத்திற்கும், மாரியம்மன் ஆலயத்திற்கும் வந்து சேருமாறு கட்டளை இட்டார்கள். அந்தக் கால பகுதி பொதுவாக சுற்றி வளைப்பு இடம்பெறுகின்ற காலப்பகுதி. அதனால் சுற்றி வளைக்கின்றார்கள் என்ற சிந்தனையில் சென்றோம்.

"ஒரு மணி நேரத்திலே மீண்டும் வந்த அவர்கள், அனைவரையும் மாரியம்மன் கோவில் செல்லுமாறு பணித்தார்கள். அனைவரும் வந்து சேர்ந்த பொழுது தான், அந்த வரலாறு காணாத துர்ப்பாக்கிய கோர சம்பவம் இடம்பெற்றது.

திடீரென்று ஒருவர் கிரீஸ் கத்தியால், ஒருவரை குத்தினார். மற்றவர்களும் தாம் கொண்டு வந்த கோடரியாலும் கத்தியாலும் மளமளவென வெட்டி சாய்த்தார்கள். இரத்தம் குபீர் குபீர் எனப் பாய்ந்தது.

" 52 பேர் அந்த இடத்தில் இரத்த வெள்ளத்தில் துடிதுடித்து இறந்ததை அனைவரும் கையறு நிலையில் அழுதழுது கண்டோம். கர்ப்பிணி, ஆண், பெண், குழந்தை என்று பார்க்காமல் அனைவரையும் வெட்டி தள்ளினார்கள். வந்தவர்கள் தமிழிலே பேசினார்கள்; ஏசினார்கள். பெண்களை கண்முன்னே கற்பழித்துக் கொலை செய்தார்கள். இந்தக் கொடூரம் இரண்டு மணி நேரம் இடம்பெற்றது. மக்கள் மரண ஓலம், அவல குரல் எழுப்பினார்கள். எதுவுமே அவர்கள் காதில் கேட்கவில்லை .

"மூன்று மணி நேரம் கழித்து காரைதீவில் இருந்து செஞ்சிலுவைச் சங்கத்தினரும், இராணுவத்தினரும் வந்து எஞ்சிய எங்களை காப்பாற்றினார்கள். நாங்கள் படுகொலை செய்யப்பட்ட 32 பேரை அழுதழுது ஒரே குழியில் புதைத்தோம். ஏனையோரை தனித்தனியாக புதைத்தோம். எங்களை அவர்கள் காரைதீவிற்கு கொண்டு சென்றார்கள். காயப்பட்டவர்களை வைத்தியசாலையில் அனுமதித்தார்கள். அங்கும் இரண்டு பேர் மரணித்தார்கள். இந்த சம்பவம் அனைவரையும் துக்கத்தில் ஆழ்த்தியது மாத்திரமல்லாமல் மாறாத வடுக்களையும் மிகுந்த பயபீதியையும் ஏற்படுத்தியது" என்றார்.

பின்னர், 1994 ஆம் ஆண்டிலே 121 குடும்பங்கள் அங்கு குடியேற்றப்பட்டன. அதற்குள், அங்கிருந்து நான்கு ஏக்கர் அரச காணியை பொலிஸ் அதிகாரி ஒருவர் ( இன்று உயிருடன் இல்லை) அடாத்தாக பிடித்து, தென்னம்பிள்ளை வைத்தார். அதனை எதிர்த்து வழக்கு தொடர்ந்தார் கிராம தலைவர் மயிலிப்போடி. நீதிமன்றத்தில் தீர்ப்பு அவருக்கு சாதகமாக வரும் என்று உணர்ந்த அந்தக் கும்பல் 1997களில் மயிலிப்போடியை படுகொலை செய்தார்கள்.

இவ்வாறு, இரத்தக் களரி கண்ட திராய்க்கேணி, 32 வருடங்களுக்கு முன்பு அனுபவித்த, அழியாத வரலாற்று வடுக்களை இன்று 32 ஆவது வருடமாக நெஞ்சில் சுமந்து கொண்டு நினைவு கூர்கின்றார்கள். இன்று திராய்கேணியில் 32 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.


## சீதாவகபுர மாநகர சபை
## கொள்முதல் விளம்பரம்

**அவிசாவலை பொது பஸ் தரிப்பிட வளாகத்தில் மேல்தளத்தில் அமைந்துள்ள கடைகள்**

சீதாவகபுர மாநகர சபைக்கு சொந்தமான வியாபார நடவடிக்கைகளுக்கு மிகவும் தகுதியான புதிய வணிக வளாகத்தில் மேல்தளத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்காக என்னால் விலை மனு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| கடையின் இலக்கம் | குறைந்த டென்டர் விலை ரூபா. | தற்போதிய சூழ்நிலை |
|---|---|---|
| U – 28/31/32 | ரூ.2973,000.00 | கட்டி முடிக்கப்பட்டது (ஒருங்கிணைந்த கடைகள் 03) |
| U – 09 | ரூ.890,000.00 | கட்டி முடிக்கப்பட்ட கடை |
| U – 64 | ரூ.720,000.00 | கட்டி முடிக்கப்பட்ட கடை |
| U - 11,12,15,16, 19,20,21,25,26,29 | ரூ.4600,000.00 | (ஒருங்கிணைக்கப்பட்டது) பயிற்சி வகுப்புகள் / அலுவலகம் / நிறுவனங்களுக்கு உகந்தது |

விலைமனு விண்ணப்பம் விநியோகித்தல்: 2022.08.25 ஆம் திகதி பி.ப 2.00 மணி வரை.

விண்ணப்பம் பெற்றுக்கொள்ளும் கடைசி நாள்: 2022.08.26 ஆம் திகதி மு.ப 10.00 மணி வரை.

விலைமனுக்கள் திறக்கப்படுவது நாள்: 2022.08.26 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு

1. விலைமனு விண்ணப்ப கட்டணமாக ரூபா. 1000.00 பணமும்இ மீள் வழங்கப்படும் டெண்டர் கட்டணமாக ரூபா. 20,000.00 பணமும் சேர்த்து இந்த காரியாலயத்தில் செலுத்தி (தேசிய அடையாள அட்டை சமர்பிக்கப்படல் வேண்டும்) பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பத்துடன் கொள்முதல் விலை மனுக்கள் சமர்பிக்கப்படல் வேண்டும்.
2. சீல் வைக்கப்பட்ட டென்டர் விண்ணப்பம் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பு "தலைவர், சீத்தாவக்கபுர மாநகர சபை, அவிஸ்சாவெல்லை" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவு தபாலிலோ அல்லது காரியாலயத்திற்கு நேரில் வந்து காரியாலயத்திலுள்ள டென்டர் பெட்டியினுல் இடவேண்டும். குறிப்பிட்ட நேரத்திற்கு பின்பு விண்ணப்பிக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**தலைவர்,**
**சீத்தாவக்கபுர மாநகர சபை,**
**அவிசாவலை.**

**விசாரணைகளுக்கு:– 036 – 2222285**

# நல்ல மனிதன் உருவாகிறான்





வ. சக்திவேல்
shagthivel@gmail.com



மனிதனுடைய வாழ்க்கை அவன் வாழ்கின்ற சூழலை பொறுத்து தீர்மானிக்கப்படுகிறது. நல்ல சூழல் ஒரு மனிதனை 'மனிதம்' நிறைந்த மனிதனாக்குகிறது. அதே சமயம் மாசடைந்த சூழல் மனிதனை நோயாளியாகவும் மன அழுத்தம் மிக்கவனாகவும் மாற்றுகிறது.

மனிதன் தான் வாழும் சூழலை பாதுகாத்து வாழும் போது, அச்சூழல் அழகாவதோடு அவனுடைய வாழ்க்கையும் அழகாக இருக்கும். இயற்கையின் படைப்பு அவ்வளவு அழகானது. இவற்றை காப்பது எம் தலையாய கடமையாகும்.

'பத்துப் பன்னிரண்டு தென்னைமரம்
பக்கத்திலே வேணும் – நல்ல
முத்துச் சுடர்போலே நிலாவொளி
முன்பு வரவேணும் – அங்கு
கத்தும் குயிலோசை சற்றேவந்து
காதில் படவேணும் – என்றன்
சித்தம் மகிழ்ந்திடவே நன்றாயிளம்
தென்றல் வரவேணும்'



முன்னர் கிராமங்களில், பாரதி கேட்கும் அனைத்தையும் பெறுவது சாத்தியமாக இருந்தது. தற்காலத்தில், கிராமங்கள் நகரமயமாக்கலை நோக்கி நகரத் தொடங்கியுள்ளன. தூய்மையான கிராமத்து வயல்வெளிக் காற்றிலும் மாசு படியத் தொடங்கிவிட்டது. சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் நோக்கிலேயே நாம் நமது ஆன்மிகத் திருத்தலங்களில் தல விருட்சங்களைப் போற்றிக் கொண்டாடுகின்றோம்; புண்ணியத் தீர்த்தங்கள் என்றும், புண்ணிய நதிகள், குளங்கள் என்றும் சொல்லி நீர்நிலைகளின் பெருமையை நிலைநட்டுகின்றோம். ஆனாலும், இக்காலத்தில் இவ்வாறான இயற்கை சூழலில் தன்னகத்தே கொண்டமைந்த அனைத்தும், மாசுபடுத்தப்பட்டு வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

'பசுமையான உலகை உருவாக்க ஒன்றிணைவோம்' எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு வாவிக்கரையோரத்தை சுத்தப்படுத்தும் நிகழ்வு, அண்மையில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு கரித்தாஸ் எகெட் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட சிரமதானப் பணியானது புளியடிக்குடா, பெரிய உரிபோடை, சின்ன உப்போடை, முனிச்வீதியை அண்டிய வாவிக்கரையோரங்களில் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட கரிட்டாஸ் எகெட் நிறுவனத்தின் பணிப்பாளர் அருட்பணி ஏ.யேசுதாசன் அடிகளாரது ஆலோசனை, வழிகாட்டல்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட குறித்த தூய்மைப்படுத்தும் செயற்பாடானது, கரிட்டாஸ் எகெட் நிறுவனத்தின் சுற்றாடல் பாதுகாப்பு செயற்றிட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டது.

இது இவ்வாறு இருக்க, 'பூலோகம் ஒரே ஒரு குடிமனை' எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சுற்றாடல் நிகழ்வுகள் பிரதேச செயலாளர் திருமதி.சிவப்பிரியா வில்வரெத்தினம் தலைமையில் நடைபெற்றன.

இதன்போது மக்களிடையே உணவுப் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வுகளை மேற்கொள்வதற்காக பிரதேச செயலக பிரிவின் கீழுள்ள 45 கிராம சேவகர் பிரிவுகளிலும் 225 விழிப்புணர்வு வீட்டுத் தோட்டங்கள், கிராம அலுவலர் அலுவலகங்கள், பொது இடங்களில் மக்களின் பங்களிப்புடன் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

எதிர்கால சந்ததியினரை ஊக்குவிக்கும் முகமாக மகிழூர் பாலர் பாடசாலை மாணவர்களால் வீட்டுத் தோட்டம் அமைக்கும் செயற்பாடுகளும், இதன்போது ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, பிரதேச செயலக பசுமைக் கழக உறுப்பினர்களால் வருடாந்தம் வெளியிடப்படும் சுற்றாடல் செய்திமடல்– 2022 வெளியீட்டு நிகழ்வு மற்றும் உணவுப் பாதுகாப்பு, சிக்கனம் தொடர்பில் 'உற்பத்தி செய்வோம்; உலகை வெல்வோம்' எனும் துண்டுபிரசுர விநியோகமும் இடம்பெற்றதோடு பிரதேச செயலக வளாகத்தில் உத்தியோகத்தர்களால் பயிர்ச்செய்கை மேம்பாட்டுத் திட்டமும் இதன்போது ஆரம்பித்துவைக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட வன பரிபாலன திணைக்களத்தின் அனுசரணையுடன் மட்டக்களப்பு ஆனந்தகிரி அறப்பணி சபையின் ஏற்பாட்டில் 'ஆளுக்கொரு மரம் நடுவோம்; இயற்கையை நேசிப்போம்' எனும் நிகழ்ச்சித்திட்டத்துக்கு அமைவாக சத்துருக்கொண்டான் கிராமத்தில் அமைந்துள்ள கோட்டைமுனை விளையாட்டு கிராமத்தின் புற்றரை கிரிக்கட் மைதான வளாகத்திலும், மட்டக்களப்பு கருவேப்பங்கேணி கோல்டன் ஈகிள் விளையாட்டு மைதான வளாகத்திலும் இடம்பெற்றன. இதன்போது திருக்கொன்றைமரம், புளியமரம், புங்கைமரம், கத்தாமரம், வேம்புமரம், நிழல்வாகை, மயிலைமரம், இலுப்பைமரம் முதலான 250 இற்கும் மேற்ட்ட மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன.





மரங்களை அழித்ததால், காடழிப்பு முதலான காரணிகளால் இயற்கையின் சமனிலை முழுமையாக பாதிக்கப்பட்டு மழைவீழ்ச்சி குறைவடைந்து, புவியில் அதிக வெப்பநிலை காணப்படுகின்றது. இவ்வாறான நிலைகளை கருத்தில் கொண்டு மட்டக்களப்பு மாவட்ட ஆனந்தகிரி அறப்பணி சபையால் 'ஆளுக்கொரு மரம் நடுவோம்; இயற்கையை நேசிப்போம்' எனும் செயற்றிட்டத்துக்கு அமைவாக, மரங்களை பராமரிக்கக்கூடிய இடங்களில் நடுகை செய்து, அவற்றை மேற்பார்வை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.





இவ்வாறு ஆங்காங்கே சிற்சில விழிப்புணர்வு நிகழ்வுகள் இடம்பெற்று வந்தாலும், காடழிப்பு, அதிக வாகனங்களின்பாவனை, கழிவுகள் நீர் நிலைகளைச் சென்றடைதல் உள்ளிட்ட பல விடங்களால் இன்னும் சுற்றாடல் பாதிப்புற்றுக் கொண்டு செல்லும் நிலைமையே காணப்படுகின்றது.

எனவே, வருடத்தில் ஒரு நாள் சர்வதேச சுற்றாடல் தினம் என நிருணயிக்கப்பட்டு, அத்தினத்தில் ஆங்காங்கே சுற்றாடல் சார்ந்த செய்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும், அவை அன்றைய தினத்துக்காக மாத்திரமே மேற்கொள்ளப்படும் விடயங்களாகத்தான் நோக்கப்படுகின்றது.

ஏனெனில், தற்கால இயந்திரமயமான யுகத்தில் மனித சமூகத்துக்கு மாத்திரமின்றி நீர் நிலைகள் மற்றும் காடுகளிலும் வாழும் உயிரினங்களுக்கு தீங்கு ஏற்படும் வகையில்,மனிதர்களாலேயே செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால், தற்கால சமூகம் மாத்திரமின்றி எதிர்கால வருகின்ற சமூகமும் பாதிக்கப்பட்டுக் கொண்டே செல்கின்றன. எனவே, சுற்றாடல் தினத்தை மாத்திரம் மையமாக வைத்து, ஒரு சில இடங்களில் அதுவும் குறிப்பிட்ட ஒரு பகுதியினர் மாத்திரம் முன்னின்று, சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகளை மேற்கொள்வதால் மாத்திரம் சிதைந்து போகும் சூழலை மாற்ற முடியாது.

இதில் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் மிகவும் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொண்டு, நாளாந்தம் மரநடுகை, நீர் நிலைகள் மாசுறுவதைக் கண்காணித்தல், காடழிப்புகளைத் தவிர்த்தல், இயற்கை முறையில் விவசாயங்களை மேற்கொள்ளல் உள்ளிட்ட பல விடயங்களைக் கைக்கொள்ளும் பட்சத்திலேயேதான், எதிர்கால சந்ததியினரையாவது சிறந்த ஆரோக்கியமான சுற்றுப்புறச் சூழலில் வாழ வைக்கலாம்.





# வன்முறையற்ற வாழ்க்கை



ஏ.எச்.ஏ ஹுஸைன்
husseinmedia000@gmail.com)



பல்லின சமுதாயத்தினர் வாழும் இலங்கையில், இளைஞர்களிடையே நல்லிணக்கம் ஏற்படாதவரை இந்த நாட்டில் சமூகங்களுக்கு இடையிலான சக வாழ்வையும் தேசிய ஒருமைப்பாட்டையும் ஒரு போதும் அடைந்து விட முடியாது.

கடந்த காலக் காயங்களை நிகழ்காலத்தில் குணப்படுத்துவதனூடாக, எதிர்காலத்தைக் கட்டியெழுப்பி, மீளிணக்கத்தைப் பலப்படுத்த வேண்டும். அதற்கான செயற்றிட்டம் இப்பொழுதிருந்தே முன்னெடுக்கப்பட வேண்டும்.

இலங்கையில் தேசிய நல்லிணக்கம், மீளிணக்கத்தைக் கட்டியெழுப்புவதில் எதிர்காலத் தலைவர்களான இளைஞர் - யுவதிகளின் பங்களிப்புகள் இன்றியமையாதவை. இவர்கள், எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும், நாட்டில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு வழிசமைக்கும் செயற்பாடுகளில் கட்டாயம் ஈடுபட



வேண்டும்.

ஈடு செய்ய முடியாத இழப்புகளைச் சந்தித்து, சொல்லொண்ணாத் துயரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் மண்ணிலிருந்து, நல்லிணக்கத்தைப் பற்றிப் பேசுவது சிரமமான விடயமாகினும் அது பற்றி சிந்தித்து, பேசித்தான் ஆக வேண்டும். ஆனால், அது அவ்வளவு இலகுவான காரியமல்ல!

இத்தகையதொரு தேசிய முக்கியத்துவம்வாய்ந்த காலத்துக்குத் தேவையான மகத்தான பணி, மட்டக்களப்பில் முன்னெடுக்கப்படுவதாக அதன் செயற்பாட்டாளர் எப்.எச்.எம் சர்மிலா தெரிவிக்கிறார்.

'இலங்கையில் வன்முறைத் தீவிரவாதத்தைத் தணித்தலுக்காக, சமூகமட்ட அமைப்புகளை திறன்விருத்தி செய்தல்' எனும் செயற்றிட்டத்தில் வளவாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டு, விழிப்புணர்வு நிகழ்வுகள் இடம்பெறுவதாகவும் தெரிவு செய்யப்பட்ட அரச பணியாளர்கள், சிவில் - பொலிஸ் குழுக்களின் பிரதிநிதிகள், சர்வமத குழுக்களின் அங்கத்தவர்கள், இளைஞர் சேவை மன்றங்களின் உறுப்பினர்கள், உள்ளூர் அமைப்புகளின் செயற்பாட்டாளர்கள் போன்றோர், இவ்விழிப்புணர்வு நிகழ்வுகளில் பங்கெடுக்கச் செய்யப்படுகிறார்கள்.

இத்தகையதொரு விழிப்புணர்வு நிகழ்வு, கிழக்குப்பல்கலைக்கழக கலை கலாசாரப்பீடத்தின் விரிவுரையாளர்கள், மாணவர்களின் உதவியோடு தமிழ், முஸ்லிம் மக்கள் இணைந்து வாழும் காத்தான்குடி பிரதேசத்திலும் அதனை அண்டிய ஆரையம்பதி பகுதியிலும் வியாழக்கிழமையும் (04) வெள்ளிக்கிழமையும் (05) நடைபெற்றது.

இன ஒருமைப்பாட்டுக்கான விளையாட்டுகளுடனும் பாடல்களுடனும் ஆரம்பமான தெரு நாடகத்தை, மண்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேச செயலாளர் என். சத்தியானந்தி ஆரம்பித்து வைத்தார்.

கிழக்குப்பல்கலைக்க நுண்கலைத்துறை முதுநிலை விரிவுரையாளர் சு. சந்திரகுமாரின் ஆக்கத்தில் எழுதப்பட்ட 'வேண்டாம் வேண்டாம் வன்முறைகள் வேண்டாம்; நாங்கள் வாழும் பூவுலகில் வன்செயல்கள் வேண்டாம்; நாடு நகர் நலன்களைச் சீரழிக்கும் வன்முறைகள் வேண்டாம்; நம்முடைய உயிர்களை அழித்தொழிக்கும் வன்முறைகள் வேண்டாம்' என்ற பாடல் இசைக்கப்பட்டது.

ஆயுதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு, ஒரு தசாப்த காலம் முடிந்து விட்டபோதிலும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதிலும் நல்ல அரசாட்சியை அமைப்பதிலுமுள்ள வாய்ப்புகள், சுருங்கிக் கொண்டே செல்வது தெளிவாகத் தெரிகிறது.

ஏனென்றால், ஆயுதப் போராட்டம் இடம்பெற்ற காலத்தில் இருந்த சமூக அமைதி கூட, இப்பொழுது இல்லையே என்று அங்கலாய்க்கும் அளவுக்கு நிலைமைகள் பின்னோக்கிச் சென்று கொண்டிருப்பதை அனுபவத்தில் கண்டுகொண்டு இருக்கின்றோம்.

தேசிய நல்லிணக்கம் ஏற்படுவதற்கு இனங்களுக்கிடையே சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் இன்றியமையாதது. ஆனால், அத்தகையதொரு சமாதானம் உள் மனக் காயங்களின்றி கட்டியெழுப்பப்பட வேண்டுமாயின், நடந்த தவறுகளுக்காக மனம் வருந்துதல் தொடர்பாக, கூட்டான செயற்பாடு அனைத்துத் தரப்பாரிடமும் வர வேண்டும்.

ஆனால், எந்தத் தரப்பினரிடம. இருந்தும் இதுவரை, நடந்த, விரும்பத் தகாத நிகழ்வுகளுக்காக 'வருந்துதல்' என்ற விடயம் காணப்படவில்லை. இந்த விடயத்தில், இடம்பெற்ற மனித குல அழிவுகளுக்காக, அந்தத் துயரங்களைக் கருத்தில் கொண்டு, அவர்கள் சுய மதிப்பீடு செய்வதற்கும் ஆயத்தமில்லாத நிலைமையே காணப்படுகின்றது.



அவ்வாறு வருத்தப்படுதல் இடம்பெறும் என்ற நம்பிக்கையும், இல்லாமலேயே காலம் கடந்து கொண்டிருக்கின்றது.

ஏனென்றால், வருத்தப்படுதல் என்பதற்குப் பதிலாக, மேலும் மேலும் தீவிர வெறுப்புணர்வுகளை ஊட்டுதல் போன்ற செயற்பாடுகளே மேலோங்கிக் காணப்படுகின்றன.



முரண்பாட்டால் தான் தாம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டதாக உணர்ந்து, பாதிக்கப்பட்ட அப்பாவி மக்கள் மிகவும் வருந்திக் கொண்டிருக்கின்றார்கள். ஏதுமறியாது, முரண்பாட்டின் இடையில் அகப்பட்டுக் கொண்ட மக்களிடம் மீண்டும், கடந்த காலத்தில் நடந்ததுபோன்ற பேரழிவுகள் ஏற்படாதிருக்க வேண்டி, தமது கடமைகளைச் சரிவரச் செய்யாததற்காக, தலைவர்கள் தங்களைத் தாங்களே கேள்வி கேட்டுக் கொள்ள வேண்டும்.

அனைத்துத் தரப்பு தலைவர்களும் ஒருவரையொருவர் அணுகி, இணைந்ததொரு மன்னிப்புக்கோரலைச் செய்து, அதைப் பொது வெளியிலும் வெளியிடுதல் வேண்டும்.

இச்செயன்முறைகளை நோக்கி, அனைத்து சிவில் சமூகப் பிரதிநிதிகளும் அரசியல் தலைவர்களும் ஆன்மீகத் தலைவர்களும் செயற்படுவதுடன், நல்லிணக்கத்தின் அனைத்து செயன்முறைகளிலும் காயங்கள் ஆற்றப்படுவதற்கான புரிந்துணர்வின் தாக்கத்தையும் ஏற்படுத்த வேண்டும்.



வாழ்விடம், உயிர், உடைமை, நிம்மதி என்று எல்லாவற்றையும் இழந்திருந்த மக்களுக்கு, மீண்டும் நிம்மதி, சமாதானம், பாதுகாப்பான வாழ்க்கைச் சூழல் என்பவை அவசியம் தேவை. இவை காலஞ்செல்லச் செல்ல, தானாகவே கிடைத்துவிடும் என்று எதிர்பார்க்கவும் முடியாது.



'ஆளாற்றாத் துயரெல்லாம் நாளாற்றும்' என்று அமைதி கொள்ளுமளவுக்கு கடந்த கால ஆயுத வன்முறைகள் ஏற்படுத்திய பாதிப்புகள், அவ்வளவு எளிதில் மறக்கவோ மறைக்கவோ மறுக்கவோ கூடியவைகள் அல்ல.

நிர்க்கதியானவர்களுக்கு நேசக்கரம் நீட்டி, அவர்களையும் தூக்கி நிமிர்த்தி விட்டாலேயொழிய, வேறு விதத்தில் உடனடி நிவாரணம் அவர்களுக்குக் கிடைக்கப்போவதில்லை. இத்தகைய குணப்படுத்தல்கள் யாருக்குத் தேவை என்பதிலும் கேள்விகள், கருத்து வேறுபாடுகள் இருக்க முடியாது.



ஏனெனில், கடந்த 30 வருட கால ஆயுத முரண்பாட்டின் விளைவாக, அனைத்து சமூகங்களையும் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றார்கள். ஆகையால் இனம், மதம், மொழி, பிரதேசம் சார்ந்து இந்தப் பணிகளைச் செய்வது அர்த்தமற்றதாகிவிடும்.

சமூக நல்லிணக்கம் என்பது, நாட்டிலுள்ள குற்றங்களின் அளவைக் குறைப்பதற்கும் நிம்மதியற்ற சூழலை மாற்றி, நம்பிக்கையையும் பாதுகாப்பையும் உருவாக்குவதற்கான வழிமுறைகளாக இனங்காணப்பட்டுள்ளது. எங்கு சரியாக சமூக நீதி நடைமுறையில் உள்ளதோ அங்கு குற்றச்செயல்களின் அளவு குறையும்; சமூகம் அமைதியாகவும் ஆனந்தமாகவும் இருக்கும்.

இலங்கையின் முரண்பாடுகள் பற்றி, உணர்ச்சிவசப்பட்டவர்களாகவும் (Emotional) எளிதாக உணர்ச்சி உட்பட்டவர்களாகவும் (Passionately) நாட்டு மக்கள் காணப்படுகின்றார்கள். நீதியுடனான சமாதானம், மானிட கௌரவத்துடனான சமாதானம், கடந்த கால நிகழ்வுகளை அழிக்காத சமாதானம் என்பனபற்றி இலங்கையர்கள் சிந்திக்க வேண்டும்.

அதுமாத்திரமன்றி, நீதியானதும் நிலைத்து நிற்கக் கூடியதுமான சமாதானத்துக்கு ஆதரவாக ஒலிக்கும் குரல்களை, ஒலிக்க விடாது தடுக்கும் நடவடிக்கைகளைத் தடுக்கவும் வேண்டும்.

இவ்வாறான நிலையில், சமாதானத்தை ஆதரித்து அதனை விரும்பும் இலங்கையர்கள் கூட்டாக இணைந்து, அச்சுறுத்தும் சக்திகளுக்கு எதிராக எழுந்து நின்று, ஓர்மையாகச் செயற்படவும் வேண்டும்.

மாறாக அமைதியாக இருப்போமானால் வாழ்வின் புனிதத்தைப் போற்றுவதும் வேறுபட்ட கருத்துகளைப் பாராட்டுவதும் வன்முறைகளை விட்டொழிப்பதுமான பெறுமானங்களைக் கௌரவிக்கக் கூடிய சமாதானமான இலங்கையை உருவாக்கக் கூடிய முயற்சிகளுக்கு அது சாவுமணி அடித்து விடும். ஆகக் குறைந்தது வன்முறை இனி ஏற்படாது என்ற நிலைக்காவது வந்து சேரவேண்டும்.

வியாழ காட்டாற்று வெள்ள அனர்த்தத்தின் காரணம் என்ன?

# கதிர்காம பாதயாத்திரை

**பாதயாத்திரிகர்களின் அனுபவப் பகிர்வு**



விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா,
பாதயாத்திரீகர்,
காரைதீவு

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் கந்தன் ஆலயத்தின் ஆடிவேல் விழாவை ஒட்டிய பாதயாத்திரை, இம்முறை பலத்த சோதனைகளுக்கு உள்ளாகி இருந்தது. அது மட்டுமல்ல, இந்தப் பாதயாத்திரை, அதன் புனிதத்துவத்தை இழந்துவிட்டதோ என்று நினைக்கும் அளவிற்கு பல அசாதாரண சம்பவங்களும் அனர்த்தங்களும் இடம்பெற்று இருந்தன.

கதிர்காம பாதயாத்திரைக்கான காட்டுப் பாதை ஜூன் மாதம் 22 ஆம் திகதி குமண சரணாலய நுழைவாயிலில் திறந்து வைக்கப்பட்டது. இது நேற்று (05) பூட்டப்பட்டது. இது வரை சுமார் 30 ஆயிரம் அடியார்கள் காட்டுக்குள் பிரவேசித்து பயணத்தை மேற்கொண்டுள்ளனர் என தெரிகிறது.

இப் பாதயாத்திரை முறையாக சீரமைக்கப்பட வேண்டும். புனிதத்துவமாக மாற்றி அமைக்கப்பட வேண்டும். இதன் கலாசாரம், பாரம்பரியம், பண்பாடுகள் பேணப்பட வேண்டும் என்று அடியார்கள் பலர் ஆணித்தரமாக கருத்து தெரிவித்தார்கள்.

இந்தப் பாதயாத்திரை, குமண, யால ஆகிய சரணாலயங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுவது தெரிந்ததே. இம்முறை, வரலாற்றில் என்றும் இல்லாத அளவில், யால சரணாலய பகுதியில் உள்ள வியாழ ஆற்றில், திடீரென ஐந்து அடிக்கு காட்டாற்று வெள்ளம் வந்து, பெரும் அனர்த்தத்தை அடியார்களுக்கு ஏற்படுத்தியது.

"இது ஒரு தற்செயலான செயல் அல்ல. இது முருகனின் சோதனை. புனித பயணத்தை மாசுபடுத்துபவர்களுக்கு கற்பித்த பாடம்" என்றெல்லாம் அடியார்கள் பல கருத்துகளை கூறினார்கள்.

### கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் (தவிசாளர், காரைதீவு)

"இந்துக்களின் அடையாளமான கதிர்காம பாதயாத்திரையை, புனித யாத்திரையாக வர்த்தமானி பிரகடனம் செய்யப்பட வேண்டும். ஏனைய சமய யாத்திரை, விரதங்கள் போன்று அரசாங்கத்தால் இதற்கான அத்தனை சலுகைகளும் வழங்கப்படவேண்டும். அது மாத்திரம் அல்ல, பாதயாத்திரை செல்வோரின் வயது கட்டுப்பாடுகள், நடைமுறை விதிகள் என்பன முறைப்படி கட்டமைக்கப்பட வேண்டும். இது விடயத்தில், சம்பந்தப்பட்டவர் கட்டாயம் கவனம் செலுத்த வேண்டும். இம்முறை வியாழையில் நடைபெற்ற அனர்த்தம் என்பது முருகப்பெருமானின் சோதனை.

" முறையற்ற ரீதியில், வழமைக்கு மாறாக பல சம்பவங்கள் இடம் பெற்றிருக்கின்றன. வியாழ ஆற்றில் திடீரென காட்டாற்று வெள்ளம்சூ மூன்று பெண் பிள்ளைகள் வயதுக்கு வந்தமை; நற்பிட்டிமுனை பெண் அடியார் மரணித்தமை; சில இளைஞர்களும் யுவதிகளும் பாதயாத்திரைக்கு பொருத்தமில்லாத உடையணிந்து, விரும்பத்தகாத முறையில் நடந்து கொண்டமை; சீட்டு விளையாடி 'பைலா' அடித்தமை; ஒரிரு மாதக்குழந்தைகளுடன் பயணித்தமை; சகோதர இனத்தவர் பலர் நீளக்காற்சட்டை கோட்சூட் அணிந்து? சூஸ் கண்ணாடி அணிந்து சுற்றுலா செல்லும் பாணியில் வந்தமை எனப் பலவற்றை குறிப்பிடலாம்.

"இவைகளுக்கு பாடம் புகட்டும் முகமாக, தொடர் மழையும் வெள்ள அனர்த்தமும் இடம்பெற்று இருக்கலாம். இனிவரும் காலங்களில் ஆசார பூர்வமாக, பக்தி முக்தியாக, புனிதமாக, கட்டுக் கோப்பாக நடைபெற வேண்டும்" என்றார்.

### சித்தர்களின் குரல் ஸ்தாபக தலைவர் சிவசங்கர் ஜி

"இம்முறை பாதயாத்திரையில் சென்ற போது, நான் கண்ட அசாதாரண விடயங்கள் பலத்த வேதனை தந்தன. குறிப்பாக, வியாழை ஆற்றில் மக்கள் சந்தோஷமாக பொழுதை கழிப்பது வழமை. இம்முறை அதற்கான வாய்ப்பை முருக பெருமான் வழங்கவில்லை. அதற்கு காரணம், முறையற்ற யாத்திரை. இது புனிதமாக்கப்பட வேண்டும் என்பதுதான் அடியேனின் அவா" என்றார்.

### கே .இரத்னேஸ்வரன் (ஆசிரிய ஆலோசகர், வீரமுனை)

"நான் 16ஆவது வருடமாக பாதயாத்திரை செல்கிறேன். இம் முறை ஏற்பட்ட சோதனையும் வேதனையும், ஒரு தடவையாவது ஏற்படவில்லை. அந்த அளவுக்கு கடும் வெயில், பயங்கர மழை, கடும் வெள்ளம்; நடக்க முடியாத அளவுக்கு சேறும் சகதியும். நிற்க, தரிக்க, படுக்க முடியாத ஈரநிலம். நிம்மதியாக தேநீர் வைத்து குடிக்க முடியாது. விறகு பெற முடியாமல் தத்தளித்த நிலைமையெல்லாம் இடம் பெற்றன. கடந்த 16 வருடங்களில், எந்தச் சந்தர்ப்பத்திலும் நாங்கள் பாதயாத்திரை செல்லும்போது, விடுதிகளில் தங்க வில்லை. ஆனால் இம்முறை, வீரச்சோலையிலும் கதிர்காமத்திலும் விடுதி வாடகைக்கு எடுத்து தங்க வேண்டிய ஏற்பட்டது.

"நாங்கள் கடந்த காலத்தில் வியாழ ஆற்றிலே மனம் விரும்பி சந்தோஷமாக காலத்தை கழிப்பது வழமை. அந்த கங்கையில் நீராடி, அந்த மணலில் படுத்து உறங்கும்போது இருக்கின்ற சுகம் எதிலும் இருக்க மாட்டாது. ஆனால் இந்த வாய்ப்பு இம்முறை கிடைக்கவில்லை. அது மாத்திரமல்ல, இஸ்லாமியர்களுக்கு, பௌத்தர்களுக்கு புனித யாத்திரையின் பொழுது, லீவு வழங்கப்படுகின்றது; ஏனைய சலுகைகள் வழங்கப்படுகின்றன. அது போன்று, இந்துக்களுக்கு புனித பாதயாத்திரை செய்யும் அரசு ஊழியர்களுக்கு லீவு வழங்குவதோடு ஏனைய சலுகைகளையும் வழங்க வேண்டும்" என்றார்.

### கணபதிப்பிள்ளை இராசலிங்கம் (நாகர்கோயில், யாழ்ப்பாணம்)

"நான் 1969இல் எனது அப்பா உடன் 13 வயதில் நடந்து, கதிர்காமத்திலே இராமகிருஷ்ண மிஷன் மடத்தில் இருந்தேன். அதன் பிற்பாடு நான் தனியாக வருகின்ற இம்முறை எட்டாவது வருடமாகும். கதிர்காமத்தில் இராமகிருஷ்ண மடம் எப்பொழுது கைவிடப்பட்டதோ அன்றில் இருந்து எனது வேதனை அதிகமாகியது.

"ஆனால், இம்முறை எமது பாதையாத்திரை வரும்போது, கல்லடியில் உள்ள இராமகிருஷ்ண மடத்தை தரிசித்தது பெரும் சந்தோஷமாக இருந்தது. பற்றிக்ஸ் சாமி முதல் வேல்சாமி வரை பாதயாத்திரை வந்த அனுபவம் இருக்கின்றது. முருகப்பெருமான் பல அற்புதங்களை காட்டி இருக்கின்றார். கதிர்காமத்தில் மீண்டும் இராமகிருஷ்ண மடம் அமைய வேண்டும்" என்றார்.

### தளபதி சுப்பிரமணியம் (வெற்றிலைக்கேணி)

"நான் கடல் தொழில் செய்து வருகிறேன்.இது தான் முதல் தடவை. எனது வருத்தம் குறைய வேண்டும் என்று பாதையாத்திரை ஆரம்பித்தேன், இடை நடுவிலே அது குறைந்துவிட்டது. முருகப்பெருமானின் அருள் கிடைத்துவிட்டது".

### சிங்கராசா ஜெயராசா (யாழ்ப்பாணம்)

"நான் ஏழாவது வருடமாக பாதயாத்திரை செல்கிறேன். சன்னதி ஆலயத்திலிருந்து இம் முறை தலைமை தாங்கி நடத்தி வந்த சந்தோசமும் இருக்கின்றது. எனது அண்ணன் கனடாவில் இருக்கின்றார். அவரது மூன்றாவது புதல்வன் நடக்க முடியாமல் இருந்தார். அவர் நடக்க வேண்டும் என்று நேர்த்தி வைத்து, நான் நடந்து வந்தேன். இப்பொழுது அவர் நடக்க ஆரம்பித்து விட்டார். அதன் காரணமாக எனது அண்ணனும் இம்முறை பாதையாத்திரையில் கலந்து கொண்டார். இந்தப் பாதயாத்திரை மேலும் புனிதமாக்கப்பட வேண்டும் என்பது எனது அவா" என்றார்.

### கணேசராஜா விதுர்ஷன் (பொறியியலாளர்–காரைதீவு)

"நான் இம் முறைதான் கன்னிப் பயணத்தை மேற்கொண்டேன். மிகவும் கஷ்டமான பயணமாக இருந்தாலும் வழிநெடுகிலும் கண்டு அனுபவித்தவைகள் மனதிற்கு சுகமாக இருக்கின்றன. வழியில் அடைமழை. சமைக்க முடியாது. நிம்மதியாக உறங்க முடியவில்லை. நடக்க முடியாத அளவுக்கு சேறும் சகதியும். குடிப்பதற்கு நீர் இல்லை. மழைநீரை வடித்து சூடாக்கி அருந்தினோம். அனைத்தும் முருகன் செயல் என்று கருதி, வைராக்கியத்துடன் நடந்தோம். அது ஒரு சுகானுபவமே" என்றார்.

### வேலுப்பிள்ளை தர்மகுலசிங்கம் (தாளையடி)

" நான் ஆறாவது வருடமாக வருகின்றேன். எனது பிள்ளைக்கு புற்று நோய் கட்டி ஏற்பட்டிருந்தது. நெஞ்சு பகுதியிலே 16 கட்டிகள்; மந்திகையில் அகற்றப்பட்டது. சுவாசப் பைக்கு கீழ் இன்னும் மூன்று கட்டிகள் இருக்கின்றன. அதனை அகற்றமுடியாது என்று மந்திகையில் டொக்டர்கள் தெரிவித்தனர். கொழும்புக்கு சென்று அதனை செய்வதற்கு எமக்கு வசதி இல்லை. நான் முருகப்பெருமானை நினைத்து, மிளகு தண்ணி குடித்து விரதம் பிடித்து நடந்து வந்தேன். இடையிலேயே கால் வெடித்து இரத்தம் கசிந்தது. ஆனால் நான் தளரவில்லை. இன்று அந்த கட்டிகள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டன. முருகனின் அருள் கிடைத்து விட்டது" என்றார்.

### முத்துலிங்கம் காண்டீபன் (காரைதீவு)


விடிய விடிய மழை பொழிந்து கொண்டிருந்தது. காட்டாற்று வெள்ளத்தால் திடீரென வியாழை ஆற்றின் நீர் மட்டம் ஐந்து அடி வரை உயர்வடைந்தது. இதனால் அடியார்கள் திக்குமுக்காட, அரோகரா கோசம் விண்ணைப்பிளந்தது. அடியார்கள் உயிரைக் கையில் பிடித்தபடி காட்டுக்குள் ஓடினர். ஆனால் அவர்களது உடைமைகளை காப்பாற்ற முடியாமல் போய்விட்டது. அவர்களது உடுப்பு பைகள், செருப்புகள், உணவுப் பொதிகள் அனைத்தும் வெள்ளத்தில் அள்ளுண்டன. நான், எனது பிள்ளைகளை வெள்ளத்தில் பொறுக்கி எடுத்தேன். ஆனால் அரிசி, மரக்கறி உணவுப் பைகளை காப்பாற்ற முடியவில்லை. வெள்ளத்தில் அள்ளுண்டன. மூவாயிரம் அடியார்கள் தங்கியிருந்த வியாழையில் காட்டுவெள்ளம் வரும் என்று எந்தவித அறிவித்தலும் இல்லை. அதுவே நள்ளிரவு அவலத்துக்குக் காரணம். பாதயாத்திரை மறுசீரமைக்க படவேண்டும்" என்றார்.

### பி. ஜெகதீஸ்வரன் (திருகோணமலை)

"இம் முறை வியாழ ஆற்றில் இடம்பெற்ற அனர்த்தம் சாதாரணமானதல்ல. சிலர் வேலைத் தூக்கிக்கொண்டு, பொய் பேசி, ஏமாற்றி வருகின்றார்கள். சன்னதியில் இருந்து வருகிற வேல் மாத்திரம் தான் உண்மையானது. ஏனைய வேல்களுக்கு அவர்கள் அபிஷேகம் செய்வதில்லை. சிலர் செருப்போடு டவுசரோடு ஆசாரம் இல்லாமல் வேல் தாங்கி வருகிறார்கள். 10 வருடம் 15 வருடம் எனப் பொய் சொல்கிறார்கள். இப்படி பாவத்தோடு வருகின்ற காரணத்தால், இந்த அனர்த்தம் இடம்பெற்றிருக்கின்றது. இனிமேலாவது வேல் தாங்குபவர்கள் புனிதமாக பயணிக்க வேண்டும்" என்றார்.

மொத்தத்தில், கதிர்காம பாதயாத்திரை புதிய பரிமாணத்துடன் வர்த்தமானி பிரகடனம் செய்து, புனிதமாக மேற்கொள்ளப்படவேண்டும் என்பதே அனைவரதும் அவா.




























## வெள்ளி முள்





கதிர்காம பாதயாத்திரையின் போது கல்லும் முள்ளும் வேதனைகளும் சோதனைகளும் சகஜம் என்பார்கள் .குறிப்பாக, முட்களிலே மிகவும் வைரமானதாக வெள்ளிமுள் கருதப்படுகின்றது. நாவலடிக்கு அப்பால் இந்த வெள்ளி முள் தோட்டமே காணப்படுகிறது. அதனை இங்கு காண்கிறீர்கள் ..

## பூவல் தோண்டி குடிநீர்





கதிர்காம பாதயாத்திரை காட்டுப் பாதையின் போது சுத்தமான குடிநீர் என்பது கேள்விக்குறியே. ஆனால், வியாழ ஆற்றின் படுக்கையில், மாதுக்கள் பூவல் வெட்டி, சுத்தமான குடிநீரை பெறுவார்கள். அந்த மகிழ்ச்சியான காட்சிகள் இவை.

# சிறார்கள் தொடர்பில் கண்ணும் கருத்துமாகவே இருக்கவேண்டும்

இந்தியாவை பொறுத்தவரையில் திருமணத்துக்காக, கூலி வேலைகளுக்காக சிறார்களை கடத்தலும் சிறார்களின் மீதான பாலியல் வன்கொடுமைகளும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன என்பது அந்நாட்டு ஊடக செய்திகளின் ஊடாக அறிந்துகொள்ளமுடிகிறது. சிறார்கள் மட்டுமன்றி குழந்தைகள் கடத்தலுக்கும் குறைவே இல்லை.

ஒருசில கிராமங்களில் கலாசாரம் எனும் போர்வையில் பழமை சிந்தனையான சிறார்கள் திருமணம் இன்னுமே கடைப்பிடிக்கப்படுகின்றது. அதுமட்டுமன்றி தங்களுடைய சொத்துக்கள் வெளியாரின் கைகளுக்குள் சென்றுவிடக்கூடாது என்பதற்காக வயது வித்தியாசமின்றி, சிறுமிகளும் திருமணம் செய்து வைக்கப்படுகின்றனர்.

சிறார்களுக்கு எதிரான செய்திகள் இந்தியாவில் நாளாந்த செய்திகளாக இருந்தாலும், இலங்கையில் அங்கொன்றும் இங்கொண்டுமாக சிறார்களுக்கு எதிரான சம்பங்கள் இடம்பெற்றாலும் மிகவும் பயங்கரமானதாகவே இருக்கும். வீட்டு வேலைகளுக்கு அமர்த்தப்படும் சிறார்களுக்கு ஏதாவது பாரிய ஆபத்து இடம்பெறும் போதுமட்டும் பல கோணங்களில் இருந்து குரல் எழுப்பப்படும்.

நீதிமன்றம் வரையிலும் செல்லும் சம்பவங்களை கூர்ந்து கவனிக்கும் ஊடகங்கள் கூட அதற்குப் பின்னரான செய்பாடுகளை ஆராய்ந்து பார்ப்பதில்லை. மற்றுமொரு சம்பவம் கிடைத்துவிட்டால் அச்சம்பவத்தின் பின்பாக தொற்றிக்கொள்ளும் மரபே இருக்கிறது.

கண்டியில் கடத்தப்பட்ட சிறுவன், மஹரகமவில் மீட்கப்பட்ட சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. ரயிலில் பயணித்த பயணிகள் விழித்துக்கொண்டமையால் 9 வயதான சிறுவன் காப்பாற்றப்பட்டன. கடத்தியக் குற்றச்சாட்டின் கீழ் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

வீட்டுவேலைக்களுக்காக அமர்த்தப்படும் சிறுவர்களுக்கு எதிரான கொடுமைகளை நினைத்துக்கூட பார்க்கமுடியாது. மாதாந்தம் சம்பள பணத்தை பெற்றுச்செல்லும் பெற்றோர்கள் இன்றேல் தரகர்கள் சிலவேளைகளில் சடலங்களை மட்டுமே பொறுப்பேற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையில் இருக்கின்றனர்.

ஆக, சிறுவர்களின் பாதுகாப்பு இன்னுமே உறுதிப்படுத்தப்படவில்லை என்பதை கண்டிய சம்பவம் எடுத்துரைக்கிறது. வீட்டிலிருந்து வெளியே செல்லும் சிறுவர்களையும் சிறுமிகளையும் இக்காலத்தில் கண்ணும் கருத்துமாக கண்காணிக்கவேண்டிய நிலைமைக்குள் பெற்றோர் தள்ளப்பட்டுள்ளனர்.

சிறுவர்களுக்கு எதிரான சம்பங்களை ஒரு செய்தியாக மட்டுமே பார்க்காது. மக்களிடத்தில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதற்கு அமைப்புகளும் பொது நிறுவனங்களும் முன்வரவேண்டும். தங்களுடைய பாதுகாப்பை தாங்களாவே தேடிக்கொள்ளும் வகையில் சிறார்களை தயார்படுத்தவேண்டும்.

தங்களுக்குத் தெரியாதவர்கள், அறிமுகம் இல்லாதவர்கள் ஏன்? பழக்கப்பட்ட உறவினர்களுடன் கூட அனுப்பிவைக்கும் போது, கூடுதலாக கவனமாக இருக்கவேண்டும். சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்களை பார்த்தால், அக்கம்பக்கத்தினர், உறவினர்களாலேயே கூடுதலான இடம்பெற்றுள்ளன.

கண்டி சிறுவனின் சம்பவத்தை சாதாரண சம்பவமாக பார்க்காமல், கடத்தலுடன் தொடர்புடைய கும்பல், ஏன்? எதற்காக? கடத்தப்பட்டார். இதற்கு முன்னர் இடம்பெற்ற சம்பவங்களுடன் சந்தேக நபருக்கு தொடர்பு இருக்கின்றதா? என்பது தொடர்பில் ஆராய்ந்து வலைப்பின்னலே தேடியறியவேண்டும் இன்றேல் சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாது.




தமிழ் Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

நல்ல விடயத்தை எண்ணும்போது, நல்ல சிந்தனை உருவாகலாம். அதை உறுதியாக மனதில் நிறுத்துக! பலர் சொல்வார்கள், "நான் பலவிடயங்களைச் சிந்திப்பேன்; பின்னர், செய்யவேண்டியதை மறந்து விடுவேன்". தொடர்ந்து செய்யாத பணிகள் மறக்கப்படும். உணர்க!

ஒவ்வொரு வேலையிலும் நுட்பங்கள் உண்டு. எந்த வேலையையும் பழகாமல் செய்வது சிரமமானது. கருமங்களில் தேர்ச்சி பெற்றவர்கள், ஒரு மணித்தியாலத்தில் முடிக்கும் நேரத்தில், தொழில் தெரியாதவர்கள் முழுநாளும் செய்துமுடிக்காமல் திணறுவவார்கள்.

இன்று, படித்த இளைஞர்களில் அநேகர், தமக்குப் பிடித்த வேலையைச் செய்து, தனவந்தர் ஆகிவிடுகின்றனர். எவ்வளவு தான் கல்வி பெற்றாலும், அதனூடாக அனுபவக் கல்வியைப் பிரயோகித்தால், அவர்கள் திறமைசாலிகளாகி விடுகின்றனர். மேலும், பலருக்கு தொழில் வாய்ப்பையும் வழங்குகின்றனர்.

உழைக்க விருப்பப்பட வேண்டும். எண்ணங்கள் வலுப்பெற்றால், காரியம் ஜெயம்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# தமிழர்களுக்கான தீர்வுத் திட்டம் கைகூடுமா?

லக்ஸ்மன்

பாராளுமன்றத்தின் ஊடாக புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்ட விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருமித்த நிலைப்பாட்டுடன் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக வாக்களிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இருப்பினும் கூட்டமைப்பின் முடிவுக்கு மாறாக கூட்டமைப்பின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக வாக்களித்ததாகவும் ஒரு கதை உலாவி வருகின்ற நிலையில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தனித்து புதிய ஜனாதிபதி தெரிவு தொடர்பில் விளக்கக் கூட்டங்கள் நடத்தி வருகின்றது.

இது, மேற்கூறப்பட்ட ரணிலுக்கு ஆதரவான வாக்களிப்பு என்ற விடயத்தில் தமிழரசுக் கட்சிக்குத் தொடர்பில்லை, ஏனைய பங்களிக் கட்சிகள் வாக்களித்திருக்கலாம் என்பதை மறைமுகமாகச் சொல்வதற்காகவோ? என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இதனை நிவர்த்திப்பதற்கு ஏன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயற்படக்கூடாது என்பது கேள்வியாகவே இருக்கிறது. அப்படியில்லையென்றால் பொதுவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்பாட்டில் விளக்கக் கூட்டம் நடத்தியிருக்கலாம் தானே என்றும் வினாக்கள் எழுந்து வருகின்றன.

இந்த நிலையில்தான் புதிய ஜனாதிபதி சர்வகட்சி அரசாங்கத்தினை அமைப்பது தொடர்பாக கருத்துக்களை வெளியிட்டார். இந்த சர்வகட்சி அரசாங்கத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழ்த் தேசியக் கட்சிகளும் இணைவதற்கான முஸ்தீபுகள் நடைபெறுகின்றன. அதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த சர்வகட்சி அரசாங்கத்தின் அமைச்சுக்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் கூடாது என்றும் கருத்துக்கள் வெளிவருகின்றன. இந்த இடத்தில் இறுக்கபிடித்து இருப்பது. தமிழ்த் தரப்பிடமிருக்கும் இருக்கும் அரசியல் தீர்வு என்ன?. அது தொடர்பான வேலைத்திட்டம் என்ன? என்ற முக்கிய விடயம் வருகிறது.

தமிழர்களின் ஆண்டாண்டு காலமான பிரச்சினைக்கும் அது தொடர்பான போராட்டங்களுக்கும் நியாயமான தீர்வு கிடைத்தாகவே வேண்டும். ஆனால், இலங்கை சுதந்திரம் பெற்ற காலந்தொட்;டு மக்கள் பிரதிநிதிகளாக வருகின்ற தமிழர் தரப்பு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தமிழர்களின் அரசியல் தீர்வு, தமிழர்களின் அபிலாசைகள், இனப்பிரச்சினைக்கான தீர்வு போன்ற விடயங்களை வைத்துக்கொண்டே அரசியலைச் செய்திருக்கிறார்கள். இன்றைய நிலையிலும் அதிகாரத்துக்கு வந்திருக்கின்ற புதிய ஜனாதிபதியிடமும் இவ்வாறான விடயங்களையே முன்வைக்கிறார்கள். ஆனால், யாரிடமும் எந்தவிதமான தீர்க்கமான தீர்வுத்திட்டமும் தமிழர்களுடைய பிரச்சினைத் தீர்வுக்கு இல்லை என்பது தமிழ் மக்களது உரிமைப்பிரச்சினை குறித்து சிந்திக்கின்றவர்களிடம் இருக்கிறது.

தற்போது அமையவிருக்கின்ற சர்வகட்சி அரசாங்கத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்களிக்குமா. பங்கெடுக்குமா என்ற கேள்விக்குப் பதிலைச் சொல்வதில் இப்போதுள்ள பொருளாதாரப்பிரச்சினை முக்கிய கெடுக்குப் பிடியாக இருக்கிறது.

தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்ற உறுப்பினர்களாக வந்திருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசியக் கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் போன்றவைகள் தமிழ்த் தேசியத்தினை தங்களுடைய தாரக மந்திரமாகக் கொண்டவை. ஆனாலும், பெருந்தேசியவாதக் கட்சிகளின் விடாக் கொண்டன் கொடாக்கண்டன் நிலைப்பாட்டுடன் இசைந்து போகவே எண்ணுபவர்களாக இருக்கிறார்கள்.

இதனை நேரடியாக மக்களிடம் சொல்வதற்குத் தயக்கம் கொண்டு இரு பக்கங்களிலும் வேறு முகங்களையே காண்பிக்கின்றார்கள். இதுவே உண்மை. அவ்வாறில்லையானால், பாராளுமன்றத்தில் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்ட டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கான உறுதியாக அவர்கள் கையொப்பமிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் வெளிப்படுத்தியிருக்கவேண்டும்.

தோற்றால் அது தேவையில்லை என்று சொல்வதற்கு, மக்களுக்கு வெளிப்படுத்துவதற்கான கடப்பாடு உள்ளவரே அவர். அதனை தன்னிடம் வாங்கி வைத்துக்கொண்டு, பங்காளிக் கட்சிகளை குற்றஞ்சாட்டிக் கொண்டிருத்தல் தவறல்லவா என்பது அக்கட்சிகளின் நிலைப்பாடு.

இருந்தாலும், வலிமையான ஜனநாயக கட்டமைப்பை உருவாக்கி இன ஐக்கியத்தை ஏற்படுத்த உளப்பூர்வமாக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயலாற்ற வேண்டும் என்கின்ற எதிர்பார்ப்பை மாத்திரம் வைத்துக் கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு நிம்மதிப் பெருமூச்செறிவதற்கு முடியாத நிலைமையையே அவர் ஏற்படுத்துகிறார் என்பதும் குற்றச்சாட்டே. இப்போதைய சூழலில் பொருளாதாரக் கட்டமைப்பை சாமானியர்கள் சுயமாக மேம்படுத்திக்கொள்ள முடியாததொரு சூழலே காணப்படுகிறது. வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே முதல் கடப்பாடாகக் கொண்டிருக்கின்ற ஒவ்வொரு குடிமகனும் ஏதாவது வழியை கண்டறிவதற்கு அரசாங்கம் உதவவேண்டும் என்றே வேண்டுகோள் விடுக்கின்றனர்.

பௌத்த தேசியவாதமும், யுத்த வெற்றிவாதமும், இராணுவ மேட்டிமைத்தனமும் நாசமாக்கிய தமிழர் தாயகப்பிரதேசத்தினைக் கட்டியெழுப்புவதற்கு அவர்களே! அவர்களை மாத்திரம் நம்பிக்கொண்டிருக்கையில் தமிழ்த் தேசியம் பேசுகின்ற தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்று கொக்கரிக்கின்றவர்கள் இத்தனை காலமாக எதனைச் சாதித்திருக்கிறார்கள். என்று கேட்டால் எதுவுமே இல்லை என்றே சொல்லிக் கொள்ள வேண்டும். சர்வதேச நாடுகள் சரியாக இராது என்று சொல்லிக்கொண்டு, ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்துக்கு இலங்கை அரசாங்கம் அனுசரணை வழங்குகிறது. பின்னர் அதனை திரும்பப்பெற்றுக் கொள்கின்றது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படும் வரை இலங்கைத் தீவு சுபிட்சமாக முன்னோக்கி நகராது என்பது வெறுமையான பகல் கனவே என்று சிங்களவர்கள் எண்ணிக் கொள்வதும். துமிழர்களுக்கான தீர்வை முன்வைப்பதற்கு அவர்கள் காலம் தாழ்த்திக்கொண்டே செல்வதும் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளின் கையாலாகாத் தனமே என்பது வெளிப்படையானாலும் எதுவும் பயனில்லை. கழுதை தேய்ந்து கட்டெறும்பானகதையாகிப் போயிருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டமைப்பும், அதன் பிரதிநிதிகள் தொகையும் அவர்களுக்கு இன்னமும் ஞானத்தைக் கொடுக்கவில்லை.

தமிழ் மக்களுக்கு ஜனநாயக உரிமைக் கோரிக்கைக்கான தீர்வு அதிகாரப் பகிர்வு மூலமே சாத்தியம் என்பதும் இன முரண்பாட்டிற்கு முற்றுப்புள்ளியாக அது அமைந்துவிட்டால் சிறப்பு என்பதும் நிதர்சனமே. ஆனாலும், பல தசாப்தங்களாக பல சந்தர்ப்பங்களில் முன்வைக்கப்பட்ட விடயங்களுக்கு சரியான அனுசரிப்பையேனும் வெளிப்படுத்தாத சிங்கள சர்வாதிகாரத்தினை மாத்திரம் நம்பலாமா என்பதும் வரலாறு மாத்திரமே. வரலாறு வழங்கிய சந்தர்ப்பங்கள் கணக்கிலெடுக்கப்படாத இலங்கையில் இப்போது ஏற்பட்டிருக்கின்ற வாய்ப்பான காலமேனும் சரியாகப் பயன்படுத்தப்படவேண்டும்.

நாட்டின் தொல்பொருள் திணைக்களம், வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, கனிய வளத்திணைக்களம், பாதுகாப்புத் தரப்புகள் ஊடாக வடக்கு கிழக்கின் பெரும்பாலான நிலப்பரப்பு சூறையாடப்பட்டுவிட்டது. தம்ழர்களின பொருளாதாரத்தின் பெரும்பகுதி வீணடிக்கப்பட்டுவிட்டது. கல்வித்துறை அடித்து ஒடுக்கப்பட்டுள்ளது. சுதந்திரமான வாழ்க்கையை தமிழர்கள் வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்துவதில் அடிப்படைவாதம் முட்டுக்கட்டையாகவே இருந்து வருகையில் சர்வகட்சி அரசாங்கத்தின் முனைப்பு வெற்றிபெறுமா என்பதனைப் பொறுத்திருந்து பார்க்கவேண்டு;ம்.

தமிழர்களுடைய சுயநிர்ணய உரிமைப்போராட்டத்தின் ஆரம்பம் அவைகளாக இருந்தாலும் போராட்டத்தினால் அவற்றினை நிறுத்திவிட முடியாத நிலையில், இப்போது சர்வ கட்சி அரசாங்கதிதிடம் தமிழர்களின் கோரிக்கைகளில் முக்கியமானதாக இருப்பது நில அதிகரிப்பை நிறுத்த வேண்டும், அபகரித்த நிலத்தை உடனடியாக விடுவிக்க வேண்டும். வடக்கு கிழக்கில் பௌத்த விகாரைகள் அமைப்பதை நிறுத்த வேண்டும். பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க வேண்டும். தமிழரின் பாரம்பரிய தாயகப் பிரதேசமான வடக்கு கிழக்கில் உள்ள இராணுவம் குறைக்கப்பட வேண்டும் என்பவைகளாகவே இருக்கின்றன. அவற்றினை விடவும் அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் சரியான விசாரணை நடத்தப்பட்டு உண்மை கண்டறியப்படுதல் வேண்டும்.

ஆனால், இன ஐக்கியம் மாத்திரமே தீர்வு என்று தோற்றுப் போனவர்களாகப் பார்க்கப்படுகின்ற தமிழர்கள் சிங்களவர்களினால் வீசப்படுபவைகளைப் பொறுக்கி எடுத்துக் கொண்டு அமைதியடையட்டும் என்ற பார்வையும் சிந்தனையும் உள்ள சூழலில் எதனைத் தான் எதிர்பார்க்க முடியும்.

## கடிதங்கள்

### கல்முனையில் மாணவிகள் கோரும் போக்குவரத்துச் சேவை

கல்முனை கல்வி மாவட்ட, மகளிர் பாடசாலை மாணவிகளின் நன்மை கருதி, பாடசாலை போக்குவரத்துச் சேவைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரச மற்றும் தனியார் பஸ்கள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாணவிகளின் பெற்றோரால் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

பாடசாலை சேவையில் ஈடுபட்ட பல ஓட்டோக்கள் தற்பொழுது தமது சேவையைக் குறைத்துக்கொண்டமையால், மகளிர் பாடசாலைகளில் கல்வி கற்கும் தமது பிள்ளைகள் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளதாகவும் சில பிள்ளைகள் அதிக தூரம் காரணமாக, பாடசாலைக்குச் செல்வதை தவிர்த்து வருவதாகவும் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் மகளிர் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவிகளின் நலன்களைக் கவனத்தில் கொண்டு அந்தந்த வலயங்களின் கல்விப் பணிப்பாளர்கள், இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் போக்குவரத்து நிர்வாகங்களுடன் கலந்துரையாடி, உரிய நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் எனவும் பெற்றோர் கோரிக்கை விடுக்கின்றனர்.

தற்காலிக அடிப்படையிலாவது இதனை நடைமுறைப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள், துரித நடவடிக்கை எடுத்து,ஈ மாணவிகளின் பாடசாலை கல்வி நடவடிக்கைகளுக்கு உதவ வேண்டும் எனவும் அவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

அ. அஸ்வர்



# அர்ப்பணித்தால் முன்னேறலாம்



என். ஆராச்சி



வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பல்வேறு பொருட்களுக்கு ஆண்டுதோறும் பெருந்தொகை பணத்தை எமது நாடு இழக்கப்படுவது காலங்காலமாக நடந்து வரும் செயலாகும். சில சந்தர்ப்பங்களில் எமது நாடுகளில் இலகுவாக உற்பத்தி செய்யப்படும் பொருள்களை கூட அதிக பணம் கொடுத்து வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யபடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

இந்த நிலையை மாற்றுவதற்கு தமக்கு தாராளமாகவும் இலகுவாகவும் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு வீட்டு உபகரணகளைத் தயாரிக்கும் பணி எட்டியந்தோட்டையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

எட்டியாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பலேல்லேகம, களனி கலா மூங்கில் கைவினை மையத்தை, மையமாகக் கொண்ட இச்செயற்பாட்டின் வேலைத்திட்டத்தில் ஒரு குழுவினர் வெற்றி பெற்றுள்ளனர்.

இந்த நிலையம் பதுள்ளவல, காரகொட, மிரிஸ்வலதன்ன, கோனகமுவ உள்ளிட்ட பல பகுதிகைளைச் சேர்ந்த 30 பேர் கொண்ட கைவினைஞர்களைக் கொண்ட குழுவினர் இந்தக் கைவினைப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த கைவினைக் களைஞர்கள் மூங்கிலை அடிப்படையாக கொண்டு பல்வேறு வடிவமைப்புகளை செய்து, வெளிநாட்டு சந்தை வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

குறிப்பாக இறாக்கைகள், மேஜை விளக்குகள், பேனை, பென்சில் ஹோல்டர்கள், பானைகள், பாத்திரங்கள் என்பன இவர்களால் தயாரிக்கப்படுகின்றன.

2007 ஆம் ஆண்டு, யட்டியந்தோட்டை பிரதேச செயலாளராக இருந்த மானெல் குலரத்ன, களனி கலை மற்றும் கைவினைப்பொருட்கள் சங்கத்துக்கு பலல்லேகமயில் மூடப்பட்ட பாடசாலையை வழங்க முன்வந்தார்.

இதன்போது குறித்த மூங்கில் தொழிற்சாலைக்கு தேவையான மூங்கில் வளர்ப்புக்கான 2 ஏக்கர் நிலப்பரப்பு கிடைக்கப்பெற்றது.

தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் இத்தொழிற்சாலையின் முன்னேற்றத்திற்காக உழைத்துள்ளதுடன், கிராம சக்தி வேலைத்திட்டத்தின் கீழ் எட்டியந்தோட்டை பிரதேச செயலாளராக இருந்த திரு.சமன் அநுர அப்போதைய அரசியல் அதிகாரத்துடன் இத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான இயந்திரங்களை வழங்கியுள்ளார்.

பின்னர் எட்டியாந்தோட்டை பிரதேச செயலாளர் சட்டத்தரணி பிரியங்கனி பெதங்கொட அரசியல் அதிகாரத்துடன் இந்த தொழிற்சாலையின் வளர்ச்சிக்காக உற்பத்தி கிராமம் திட்டத்தின் கீழ் 80 லட்சம் மதிப்பிலான இயந்திரங்கள் வழங்க செயல்பட்டுள்ளார்.

> **சுமார் எட்டு வருடங்களாக ஈடுபட்டு வருகிறேன். மூங்கில் நாணலில் அலங்கார பொருட்கள் மட்டுமின்றி பிரம்பிலும் அலங்கார வடிவமைப்புகள் செய்யப்படுகின்றன. தற்போது அலங்கார வடிவமைப்பை தாண்டி மூங்கில் மரச்சாமான்கள் தயாரித்து வருகிறோம்**

அத்துடன் இத்தொழிற்சாலைக்கு தேவையான மின்சாரத்தை பெறவும் நடவடிக்கை எடுத்துள்ளார். அதேப்போல் அதே காலகட்டத்தில் கிரிஹெல கந்த பகுதியில் பிரம்பு உற்பத்தியும் 2 ஏக்கர் நிலப்பரப்பில் ஆரம்பிக்கப்பட்டது.

இது தொடர்பில் எட்டியந்தோட்டை பிரதேச செயலாளர் சட்டத்தரணி பிரியங்கனி பெத்தாங்கொட கருத்து தெரிவிக்கையில்,

இந்த மூங்கில் தொழில் பல்லேகம சுற்றுவட்டாரப் பகுதிகளில் சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் இயற்கை மூலப்பொருட்களான மூங்கில் மற்றும் பிரம்பு ஆகியவற்றால் தயாரிக்கப்படுவதால் அவை சுற்றுச்சூழலுக்கு உகந்தவை.

பிளாஸ்டிக் பொருட்களுக்கு இது ஒரு சிறந்த தீர்வாகும். இது சுற்றுச்சூழலில் மக்காத பிளாஸ்டிக் சேர்வதைத் தடுப்பதுடன், மற்றும் சில பிளாஸ்டிக் பொருட்கள் உடலுக்கு தீங்கு விளைவிக்கும்.

உதாரணமாக, பிளாஸ்டிக் இடியப்ப தட்டுகளை எடுத்துக் கொண்டால் அது உடலுக்கு ஆரோக்கியமற்றது.

ஆனால் இந்த மூங்கிலை தட்டுகளைப் பயன்படுத்தி இடியப்பம் செய்யப்படும் போது. ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிப்பதில்லை. இதன் மூலம் சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் உடலுக்கு ஏற்ற பொருட்களை நிறைய உற்பத்தி செய்கிறோம்.

பல்வேறு சமயங்களில் அரசு பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்ததன் மூலம் இத்தொழில் வளர்ச்சிக்கு பெரும் பணியை செய்ய முடிந்துள்ளது.தற்போது உள்நாட்டு தேவை மட்டுமின்றி வெளிநாட்டு தேவையும் கிடைத்து வருவதால் இத்தொழிலும் பெரும் உதவியாக உள்ளது. நாட்டுக்கு அந்நிய செலாவணியையும் இது வழங்குகின்றது.

இது தொடர்பில் களனி கலை கைவினைப்பொருட்கள் சங்கத்தின் கலைஞர் திருமதி இந்திகா லக்மாலி தனது அனுபவத்தை பின்வருமாறு விவரித்தார்,

2014ஆம் ஆண்டு நான் இந்த மத்திய நிலையத்தைத் தொடர்பு கொண்டேன். விஜேசூரிய என்ற ஒரு பெரியவர் இருந்தார். அந்த மாமனிதரின் கீழ் நாங்கள் ஈடுபட்டோம். பின்னர் களனி கலா கைவினைஞர் சங்கத்தின் சக ஊழியரான திரு.நிமல், எட்டியந்தோட்டை பிராந்திய செயலகம் மற்றும் ஷில்பா சபையுடன் இணைந்து எம்மை இந்த நிலைக்கு கொண்டுவந்தார்.

முதலில் கைவினைப் பொருள்கள் உற்பத்தி பயிற்சி வழங்கப்பட்டது. இன்று இந்த நிலையம் பாரிய உற்பத்தி பொருள்களைத் தயாரிப்பதுடன், கோடி கணக்கான சொத்துகளுக்கு எமது நிலையம் உரிமையாளராகியுள்ளது.சகல உபகரணங்களும் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளன. சிறந்த வருமானமும் கிடைக்கின்றது.

இன்று இந்த நிலையத்தில் 30 பேரைக் கொண்ட குழுவொன்று உள்ளது.

சிலர் தமது வீடுகளில் இருந்தவாறே இந்த கைவினைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இதன்மூலம் மாதாந்தம் 30,000 ரூபாய் வருமானம் ஈட்டுபவர்களும் இருப்பதாகத் தெரிவித்த அவர், அர்ப்பணிப்பு இருந்தால் முன்னேறலாம். எதற்கும் அர்ப்பணிப்பு அவசியம் என தெரிவித்தார்.

“சுமார் எட்டு வருடங்களாக ஈடுபட்டு வருகிறேன். மூங்கில் நாணலில் அலங்கார பொருட்கள் மட்டுமின்றி பிரம்பிலும் அலங்கார வடிவமைப்புகள் செய்யப்படுகின்றன. தற்போது அலங்கார வடிவமைப்பை தாண்டி மூங்கில் மரச்சாமான்கள் தயாரித்து வருகிறோம். தேசிய கைவினைக் கழகம் எங்களுக்கு உதவியது. எட்டியந்தோட்டை பிரதேச செயலகத்திலிருந்து தற்போதைய பிரதேச செயலாளர் உட்பட அனைவரின் ஆதரவையும் பெற்றுள்ளோம். தற்போது வெளிநாடுகளில் இருந்தும் எமது மூங்கில் பொருட்களுக்கான ஓர்டர்களை பெற்று வருகின்றோம்” என்கிறார் திருமதி அனுஷா சமன்மாலி.



# விழலுக்கு இறைத்த நீர்...



சுப்பிரமணியம் பாஸ்கரன்



வடக்கு மாகானத்தில் மாகாண மற்றும் மத்திய அரசுகளால் முன்னெடுக்கப்பட்டுள்ள போருக்குப் பின்னரான அபிவிருத்திகளில் பல கட்டுமானங்கள் பயன்பாடற்றுக் காணப்படுகின்றன.

இவ்வாறு பெருந்தொகை நிதிகளை செலவிட்டு அமைக்கப்பட்ட பல கட்டுமானங்கள், காடுகள் மண்டியும் கவனிப்பாரின்றியும் காணப்படுகின்ற அதே நேரம், மிக முக்கியமான பல்வேறுபட்ட தேவைப்படுகளும் காணப்படுகின்றன

குறிப்பாக, வீதி அபிவிருத்திகள், பாலங்கள், பாடசாலை வசதிகள், முன்பள்ளிகள், அற நெறிக் கற்கை நிலையங்கள் எனப்பல்வேறு தேவைகள் ஒவ்வொரு பிரதேசங்களிலும் காணப்படுகின்றன.

அதேபோல, பெருந்தொகை நிதி செலவிட்டு அமைக்கப்பட்ட பல கட்டுமாணங்கள் கைவிடப்பட்டும் காணப்படுகின்றன. இவ்வாறு அமைக்கப்பட்டு ஆறு ஆண்டுகளாக கைவிடப்பட்ட ஒன்று தான் வன்னேரிக்குளம் சுற்றுலா மையமாகும்

கிளிநொச்சி, வன்னேரிக்குளம் பகுதியில் சுமார் ஆறு மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்ட சுற்றுலா மையம், இன்றுவரை எந்தவித பயன்பாடு இன்றி காணப்படுவதாகவும் இதில் உள்ள பொருட்கள் களவாட்டும் சேதமாக்கப்பட்டும் காணப்படுவதாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில், சுற்றுலா பயணிகளை கவரக்கூடிய இயற்கையிடமாகவும் பருவ காலங்களில் பலவகையான வெளிநாட்டுப் பறவைகளின் வருகை கொண்ட இடமாகவும் காணப்படும் வன்னேரிக்குளத்தை அண்டிய பகுதியை, சுற்றுலா மையமாக அமைக்குமாறு பல்வேறு தரப்பினரும் காலம் காலமாக கோரிக்கை விடுத்து வந்துள்ளனர்.

இந்த நிலையில், 2017ஆம் ஆண்டு வடமாகாண முதலமைச்சரின் அமைச்சின் கீழான மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடை நிதியின் மூலம், சுமார் ஆறு மில்லியன் ரூபாய் செலவில் கரைச்சி பிரதேச சபையால் நிர்மானிக்கப்பட்டு, 2017ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் திகதி முன்னாள் வடமாகாண முதலமைச்சர் சீ.வி .விக்கினேஸ்வரனால் உத்தியோகபூர்வமாக திறந்த வைக்கப்பட்டது.



> **குடிநீர் விநியோக கட்டுமானம் முன்னெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டாலும் அது 15 நாள்கள் கூட செயற்படவில்லை என்பதை பிரதேச வாசிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்**

இவ்வாறு, திறந்து வைக்கப்பட்ட சுற்றுலா மையம், இன்றுவரையும் எந்தவித பயன்பாடும் இன்றி அதன் மின்இணைப்புகள் சேதமாக்கப்பட்டும் அங்கு காணப்பட்ட பொருட்கள் களவாடப்பட்டும் உள்ளன.

கடந்த ஆறு வருடங்களுக்கும் மேலாக, எந்தவித பயன்பாடும் அற்ற கட்டடங்களாகவே, இவை காணப்படுவதாகவும் பல்வேறு தரப்பினரும் குற்றம் சாட்டி வருகின்றனர். ஆனால், பிரதேச சபையால் இதனை பராமரிப்பதற்கான எந்த நடவடிக்கைகளும் எடுத்தாக இல்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச சபைக்கு உட்பட்ட மலையாளபுரம், அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பு குடிநீர் விநியோகத்திட்டங்கள் வன்னேரிக்குளம் பகுதியில் அமைக்கப்பட்ட சுற்றுலா மையம் உட்பட மூன்று இடங்களிலும் ஒரே நாளில் வடக்கு மாகாண சபையினுடைய நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் பூரணப்படுத்தப்பட்டு, பெரும் எடுப்பிலான விழாக்கள் நடத்தப்பட்டு திறந்து வைக்கப்பட்டன. இந்த மூன்று கட்டுமானங்களும் இன்று செயலிழந்த நிலையில் காணப்படுகின்றன.

இது போன்று மாகாண அரசினதும் மத்திய அரசினதும் பெருந்தொகையான நிதிகளை மக்களினுடைய வரிப்பணத்தில் இருந்து செலவழித்து அமைக்கப்பட்ட கட்டுமானங்கள், இன்று வரை பயன்படுத்தப்படாமல் அல்லது பயன்பாட்டுக்கு உட்படுத்தப்படாமல் காணப்படுகின்றன.

குறிப்பாக, மலையாளபுரம் கிராமத்தில் வசிக்கின்ற குடும்பங்கள் தமக்கான குடிநீர் பெற்றுக் கொள்வதில் காலம் காலமாக பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்த நிலையில், அந்தப் பிரதேசத்துக்கான குடிநீர் விநியோக கட்டுமானம் முன்னெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டாலும் அது 15 நாள்கள் கூட செயற்படவில்லை என்பதை பிரதேச வாசிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அடுத்து, அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பில் அமைக்கப்பட்டிருக்கின்ற குடிநீர் வினியோகத் திட்டமும் செயலிழந்து காணப்படுவதுடன் குறித்த நீர் தாங்கியும் இடிந்து விழும் நிலையில் காணப்படுகின்றது.



மட்டக்களப்பு மண்ணின்

# மிகப் பெரிய சொத்து

**'கலைக்கோட்டன்' அழகையா இருதயநாதனின் பிரிவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்**



க. விஜயரெத்தினம்

இலங்கையின் கிழக்குமண் பல்துறைக் கலைஞன் ஒருவரை இன்று இழந்து தவிக்கின்றது. "முடியாது அல்லது தெரியாது" என்று சொல்லத் தெரியாதவர்தான் அமரர் கலைக்கோட்டன் அழகையா இருதயநாதன் எனும் கலைஞர்.

கலைக்கோட்டன், கலாபூஷணம், இலக்கியச் செம்மல் என கௌரவப் பெயர் கொண்டு, கலைப்பயணம் செய்தவரே அழகையா இருதயநாதன்.தான் இறக்கும் வரைக்கும் ஊதியம் எதிர்பாராது கலைத்துறையில் பயணித்தவர் இவர்.

கடிந்து பேசுவது போல் நடித்து, நடிக்கக் கற்றுக் கொடுத்ததால் நாடகத்துறையில் அதிகம் பேசப்பட்டவர். 'கலைக்கோட்டன்' என செல்லமாக அழைத்து இலக்கியத்துறையில் தடம்பதித்தவரும், மட்டக்களப்பு மாவட்ட சாரண ஆணையாளருமான அழகையா இருதயநாதன், மட்டக்களப்பில் ஜூலை 25ஆம் திகதி கலைத்துறையில் இருந்தும் இந்த உலகத்தில் இருந்தும் விடைபெற்றுச் சென்றுள்ளார்.

மட்டக்களப்பு, பாலமீன்மடு கிராமத்தில் 1949.5.17 திகதி காலஞ்சென்றவர்களான அழகையா பூரணம்மா தம்பதிகளுக்கு மகனாக பிறந்துள்ளார். ஆறு சகோதர்களுடன் குதூகலமாக பிறந்தவர், தனது ஆரம்பக்கல்வியை பாலமீன்மடு கிராமத்தின் அரசினர் பாடசாலையிலும் இடைநிலைக்கல்வியையும் உயர்தரக்கல்வியையும் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் படித்து, தமது ஆசிரியர் நியமனத்தை பெற்றுக்கொண்டு, மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் மாணவர்களுக்கு ஆசிரியர்பணியை முன்னெடுத்தார். அதன் பின்னர் ஆசிரியையான தயாநிதியை கரம்பிடித்து, மூன்று பிள்ளைகளுக்கு தந்தையானார். அதன்பின்னர், அதிபர் பரீட்சையில் சித்தியடைந்து மட்டக்களப்பு நரிப்புல்தோட்டம் அரசினர் பாடசாலை, மகிழவெட்டுவான் மகாவித்தியாலயம், மட்டக்களப்பு திரேசா பெண்கள் பாடசாலை, பாலமீன்மடு அரசினர் பாடசாலை ஆகிய பாடசாலைகளில் அதிபராக இருந்து காத்திரமான கல்விப்பணிகளை செய்து ஓய்வு பெற்றார்.

தனது தந்தையார் ஒரு கூத்துக்கலைஞராக சமூக மட்டத்தில் திகழ்ந்து, சமுதாயரீதியான சமூக சீர்திருந்த விடயங்களை கருப்பொருளாக வைத்து, பல கூத்துகளை அரங்கேற்றினார். தனது தந்தையாரைப் பின்பற்றி கலைத்துறையில் இருந்த ஆர்வத்தை, கலைஞர் கலைக்கோட்டன் வாழையடி வாழையாக கைக்கொண்டார்.

இலக்கியத்துறையில் கவிதை, சிறுகதை, நாடகம், சினிமா கூத்துக்கலை, குறுந்திடைப்படங்கள் படைத்தல், தொலைக்காட்சி நாடகங்களை எழுதுதல், இசைஅமைத்தல், இசைக்கோர்ப்பு செய்தல், சாரணர் வேலைத்திட்டம் என தன்னை அர்ப்பணித்து, கலைத்துறை உலகில் சிறந்து விளங்கினார். இவருடைய சிறுகதைக்கு கிழக்கு மாகாண கல்வி, கலாசார, பண்பாட்டு திணைக்களத்தினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

> **அவருடைய நாவல்கள் தான் புதிதாக எழுதிக் கொண்டிருக்கும் நாவல்களைக் காட்டி வெளியீட்டுவைத்தார் வெளியீட்டு வைத்தார். மட்டக்களப்பு மண், ஒரு மிகப் பெரிய சொத்தை, இனப் பற்றாளனை இழந்து நிற்கின்றது**

> **சமூக மட்டத்தில் திகழ்ந்து, சமுதாயரீதியான சமூக சீர்திருந்த விடயங்களை கருப்பொருளாக வைத்து, பல கூத்துகளை அரங்கேற்றினார்.**

> **மாணவர்களுக்கு ஆசிரியர்பணியை முன்னெடுத்தார். அதன் பின்னர் ஆசிரியையான தயாநிதியை கரம்பிடித்து, மூன்று பிள்ளைகளுக்கு தந்தையானார்**

கிழக்கு மண்ணின் ஒரு மாபெரும் கலைஞனாக இருந்து மறைந்திருக்கிறார் என்பது கலைத்துறை உலகிற்குற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். இவர் எல்லா துறைகளுக்கும் தன்னை ஆழப்பதித்ததால் 'கலைக்கோட்டன்' என துறைப்பெயரோடு அழைக்கப்படலானார்.

மட்டு.மாநகரின் சாரணிய இயக்கத்தின் முன்னோடியாகவும் மட்/ மாவட்ட பல்சமய ஒன்றியத்தின் உறுப்பினராகவும் இருந்து பல சமூகசேவைகளை முன்னெடுத்தார். இவர், மகுடம் கலை இலக்கிய காலாண்டிதழின் தீவிரவாசகரும் ஆவார். மகுடம் பௌர்ணமி கலை இலக்கிய நிகழ்வுகளின் ஆரம்ப காலங்களில் இவரது வருகை தவறாது இருக்கும்.

'கொடகே' நிறுவனம் நடத்திய சிறுகதைத் தொகுப்பு போட்டியில் இவரது சிறுகதைகள் பரிசுக்குரியதாக தேர்வு செய்யப்பட்டு, 'அமேசன் காட்டில் அழகன் பூசாரி' என்ற பெயரில் நூலாக வெளியிடப்பட்டது. இவரது 'உணர்வுகள்' என்ற நாடக நூல், கிழக்கு மாகாண இலக்கிய விருது பெற்றது. 'உணர்வுகள்' என்ற நாடகத் தொகுதியில் நாட்டுக்கூத்து, மேடை நாடகம், அம்மானை கவிதை ஆகிய அம்சங்கள் உள்ளடங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

2004 சுனாமி பேரவலத்தில் தனது மகனை பறிகொடுத்த கவலையை மறக்க அவர் கலை இலக்கியத்தின்பால் அதிக ஈடுபாட்டுடன் தொடர்ந்து இயங்கினார். புனித ஜோசப்வாஸ் தொடர்பான இவரது தொலைக்காட்சி நாடகம், மிக முக்கியமானதோர் ஆவணப்பதிவாகும். ஒவ்வொரு பாஸ்கா காலத்திலும் தேவாலய முன்றலில் தவறாது அரங்கேறும்.

கத்தோலிக்கரானாலும் இந்து சமய இதிகாசங்களால் கவரப்பட்டு, நாட்டுக் கூத்துக் கலையை தன் கைவந்த கலையாக்கிப் பயிற்றுவித்தவர். பொம்பலாட்டத்தின் புதிய வடிவத்தை பாஸ்கா காட்சிகளாக வடிவமைத்து, மட்டக்களப்பின் கத்தோலிக்க திருஅவையால் நேசிக்கப்பட்டார். சினிமா துறையை சிக்கனமாக செய்ய கற்றுக்கொண்டவர்; அதனை செய்து காட்டியவர். சிந்தனையாளர், சிரிக்கத் தெரிந்த சிங்க -ராஜா இவர்தான். அதீத மரியாதைக்குரியவர். சாரணிய சணக்கியன் ஆதலால்தான் மாவட்ட ஆணையாளராய் உயர்ந்து பணிசெய்தார்.

மனித வாழ்க்கை அடையாளங்களே அவன் இறப்பின் போது பிரதிபலிக்கிறது. இறப்புக்குப் பின்னர் வாழ்வு இருக்கின்றதா என்பது கேள்வியல்ல; இறப்பதற்கு முன்னர் நீங்கள் உங்கள் வாழ்க்கையை எப்படி வாழ்ந்தீர்கள் என்பதே கேள்வியாகும்.

அதுபோலத்தான், இறப்புக்கு முன்னர் கலைக்கோட்டன் சிறப்பாக தனது வாழ்கையை கலைப்பயணத்தில் ஈடுபடுத்தி, தனது வாழ்க்கையை இரசித்துவிட்டு விடைபெற்றுச் சென்றுள்ளார் என்பதுதான் உண்மையாகும்.

புனித மிக்கேல் கல்லூரியில் 1980 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கல்விகற்றவர்கள் இருதயநாதன் ஆசிரியரை தெரியாமல் இருக்க முடியாது. கல்லூரி வளர்ச்சியில் மாத்திரமல்ல, ஒவ்வொரு மாணவனின் வளர்ச்சியிலும் ஆளுமை செலுத்திய ஆசானாக திகழ்ந்தார் என்றால் மிகையாகாது. அதுமாத்திரமின்றி, எமது காத்திரமான பங்களிப்பை கலை, இலக்கியங்களுக்கு நாம் நல்க வேண்டும் என்று தனது வீட்டுக்கு அழைத்து, அவருடைய நாவல்கள் தான் புதிதாக எழுதிக் கொண்டிருக்கும் நாவல்களைக் காட்டி வெளியீட்டுவைத்தார்.

மட்டக்களப்பு மண், ஒரு மிகப் பெரிய சொத்தை, இனப் பற்றாளனை இழந்து நிற்கின்றது. ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.





அமரர் சாரல்நாடனின்

# 'வானம் சிவந்த நாட்கள்'

**நாவல் வெளியீடும் எட்டாவது நினைவேந்தலும்**





எச். எச் விக்ரமசிங்க பதிப்பாசிரியர்

நாட்டின் நோய்த் தொற்று நிலைவரம் காரணமாக, கடந்த இரண்டு வருடங்களாக அனுஷ்டிக்கப்படாத சாரல்நாடன் நினைவேந்தல் நிகழ்வு, இவ்வருடம் சிறப்பாக ஜூலை 31 ஆம் திகதி, கொட்டகலை தமிழ் மகா வித்தியாலத்தில் நடத்தப்பட்டது.

இந்த எட்டாவது நினைவு தின நிகழ்வில் முக்கிய அம்சமாக மு. நித்தியானந்தன் எழுதிய காத்திரமான முன்னுரையுடன், மலையக பதிப்பாளர் எச். எச். விக்ரமசிங்கவின் முனைப்பில் தமிழகத்தில் பதிப்பிக்கப்பட்ட சாரல் நாடன் எழுதிய 'வானம் சிவந்த நாட்கள்' எனும் நாவல் இலங்கையில் முதன் முதலாக வெளியீடு செய்யப்பட்டது.

மங்களவிளக்கேற்றல் மற்றும் மலரஞ்சலியின் பின் தினேஸ் எழுதிய கவிதை வழி, கவிதாஞ்சலி அவரின் தாயாரால் வாசிக்கப்பட்டு நிகழ்ச்சி ஆரம்பமானது. தலைமை வகித்த கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளரும் இலக்கியவாதியுமான சு.முரளிதரன், இந்த நாவல் ஒரு வரலாற்று நாவலாக அமைவதோடு, இந்த நாவல் வெளியீடும் வரலாற்று முக்கியத்தவம் வாய்ந்தது. லண்டனில் நடைபெற்ற மலையக இலக்கிய மாநாட்டில் இந்த நாவல் வெளியிடப்பட்டதோடு, சாரல்நாடன் என்ற பெயரில் ஓர் அரங்கம் நடத்தப்பெற்றமையானது அவருக்கு கிடைத்த மிக உயர்ந்த கௌரவமாகும் என்றார்.

நாவல் பற்றிய பார்வையினை பதிவு செய்த சு. தவச்செல்வம், இந்த நாவல் மூலம் சாரல்நாடன் எவ்வாறு தொழிலாளர்களை நேசிக்கும் ஒருவராக விளங்குவதோடு உண்மையாக தொழிலாளர் விடுதலைக்கு போராடும் ஆளுமைகளை முன்னிறுத்தி போராட்டங்களை முன்னெடுப்பதின் முக்கியத்துவத்தையும் உணர்த்துகின்றது எனக் குறிப்பிட்டார்.

'சாரல்நாடன் மலையகத்தின் ஒரு சகாப்தம்' எனும் தலைப்பிலான நினைவேந்தல் உரைகளில், முதலாவதாக அவருடைய பள்ளி சகபாடி சாகித்யரத்னா மு.சிவலிங்கம், ஹைலேண்டஸ் கல்லூரில் கல்வி கற்கும் போது ஜொலிக்கும் மாணவர்கள் சிலரிடையே சாரல்நாடன் எவ்வாறு கலை இலக்கிய செயற்பாடுகளில் அக்கறை கொண்டிருந்தார் என விவரித்ததோடு, 24 நூல்களை படைத்த சாரல்நாடனின் வெற்றிக்கு அவரின் துணைவியாரின் பங்களிப்பை போற்றினார்.

அவரை அடுத்து பேசிய கலாபூசணம் மொழிவரதன், சாரல்நாடன் எவ்வாறு மலையக இலக்கியத்துக்கு பங்களித்ததோடு தனது நூல்களும் வெளிவருவதற்கு ஒத்துழைத்தார் எனக்கூறியிருந்தார்.

ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியின் முன்னைநாள் துணைப் பீடாதிபதி வ. செல்வராசா, சி.வி. வேலுப்பிள்ளையை வெகுஜனப்படுத்தவதில் சாரல்நாடன் ஆற்றிய பணியை பாராட்டினார்.

கொட்டகலை ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ஜெ.சற்குருநாதன், சாரல்நாடனின் பதிப்பு முயற்சிகள் குறித்தும் அதன் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைத்தார்.

மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரி முன்னைநாள் பீடாதிபதி சிவ ராஜேந்திரன், சாரல்நாடனோடு பழகிய காலத்தில் அவருக்கு அறிமுகப்படுத்திய மலேசிய நாட்டின் மக்கள் செயற்பாட்டாளர் தோழர் வரதராஜனோடு அவர் உரையாடிய வேளையில் சாரல்நாடன் பங்களித்த விதத்தை எடுத்துரைத்து சிலாகித்தார்.

இல நாகலிங்கம் தன்னை எவ்வாறு ஒரு சிறுகதை எழுதத்தூண்டி அவுஸ்ரலிய நாட்டில் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெறச்செய்தார் எனக்குறிப்பிட்டார்.

சிவனு மனோகரன் எவ்வாறு தனது ஆரம்ப கால சிறுகதைகள் வெளிவந்த போது, அதனை வாசித்து தனிப்பட்ட ரீதியில் கடிதம் எழுதி, கதைகள் குறித்து மதிப்பீடு செய்து ஊக்குவித்தார் என்றும் இனி சாரல்நாடனை அடுத்த தலைமுறைக்கு முன்னெடுப்பது குறித்து கருத்துகள் கூறினார்.

கொட்டகலை ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் அகிலன், தமிழகத்தில் கலாநிதிப்பட்ட ஆய்வு மாணவர் பெருமாள் சரவணக்குமார் நடேசய்யர், 1915 ஆம் ஆண்டு எழுதிய 'ஒற்றன்' நாவலை பதிப்பித்து அதனை சாரல்நாடனுக்கு சமர்ப்பணம் செய்து, அவருக்கு பெருமை சேர்த்துள்ளார் என்பதை பதிவு செய்தார்.

பத்தனை டேவிட், நூல்களின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்ததோடு சாரல்நாடனின் நூல்கள் எப்போதும் உசாத்துணைகளாக பயன்படுத்த வல்லன என்றார்.

சுதர்மமகாராஜன் பேசுகையில், தமது பெருவிரல் இயக்கம் மாணவர்களிடையேயும் இளைஞர்களிடையேயும் நல்ல வாசிப்பு பழக்கத்தை முன்னெடுக்க பணி செய்த போது, அதில் சாரல்நாடனின் புலைமைத்துவ வழிகாட்டல் பங்களிப்பு செய்தது பற்றிக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய கணேசலிங்கம், சாரல்நாடன் தன்னை எப்படி ஓர் ஆய்வாளனாக நிலைமாற்றம் செய்ய அனுசரணை செய்தார் என்பதை கூறி அவரின் நூல்கள் மலையக ஆய்வுகளுக்கு துணைக்கரமாகுமென்றார்.

ஆசிரியர் யுகேஸ்வரி பேசும் போது, தான் பணியாற்றும் பாடசாலையில் சாரல்நாடனின் மகள் ஜீவகுமாரியும் பணியாற்றுவதால் சாரல்நாடானைப் பற்றி பேசும் போது ஒரு பெருந்தந்தையோடு நமக்கும் உறவினருக்கும் உணர்வு தோன்றுகின்றது என்றார்.

ஜீவகுமாரியின் நன்றியுரையில், இந்த நாவலை தந்தையார் இறந்து எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர், கேட்டு வாங்கி தனது சொந்த செலவில் பிரசுரித்த எச். எச். விக்ரமசிங்கவுக்கும் காத்திரமான முன்னுரை எழுதிய மு. நித்தியானந்தன், தெளிவத்தை ஜோசப், அட்டைப்படம் வரைந்து உதவிய பிரபல ஓவியர் கலைஞர் லண்டன் கே. கே. ராஜாவுக்கும் இந்த நாவலைப் பிரசுரித்த வீரகேசரி நிறுவனத்தினருக்கும் தந்தையை நினைவுகூர்ந்த அனைவருக்கும் நன்றியை தெரிவித்தார்.

மு.சிவலிங்கம், சு.முரளிதரன் ஆகிய இருவரின் வழிகாட்டலின் கீழ், சாரல்நாடன் கீர்த்தியை அர்த்தபுஷ்டியாக முன்னெடுக்க செயற்குழு அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




> **தந்தையார் இறந்து எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர், இந்த 'வானம் சிவந்த நாட்கள்' நாவலை கேட்டு வாங்கி தனது சொந்த செலவில் பிரசுரித்த எச். எச். விக்ரமசிங்கவுக்கு ஜீவகுமாரி நன்றியை தெரிவித்தார்**



யாழ்ப்பாண பல்கலையில்

# சர்வதேச தமிழியல் ஆய்வு மாநாடு

யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழியல் மற்றும் தமிழிசை வளரச்சிக்கென 'சிங்கப்பூர் எஸ்றேற்றர்' கந்தையா கார்த்திகேசு நிதியத்தின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறையால் நடத்தப்பட்ட மூன்றாவது சர்வதேச தமிழியல் ஆய்வு மாநாடு, புதன்கிழமை (03) யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையாரங்கில் நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எம். இரகுநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவரும் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினருமான 'செஞ்சொற்செல்வர்' கலாநிதி ஆறு. திருமுருகன் ஆசியுரையையும் கலைப் பீடாதிபதி பேராசிரியர் கே. சுதாகர், பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா ஆகியோர் சிறப்புரைகளையும் நிகழ்த்தினர்.

யாழ். பல்கலைக் கழக கலைப்பீடத் தமிழ்த் துறையின் முன்னாள் தலைவர் கலாநிதி சி. சிவலிங்கராஜா திறப்புரையாற்றி ஆய்வரங்கைத் திறந்து வைத்தார். 'ஈழத்துத் தமிழியல் மரபும் மாற்றமும்' என்ற கருப்பொருளில் இடம்பெற்ற இந்த ஆய்வு மாநாட்டில், முன்னாள் துணைவேந்தர்களான பேராசிரியர் என். சண்முகலிங்கன், வாழ் நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, முன்னாள் துணைவேந்தரும் வவுனியா பல்கலைக்கழக வேந்தருமான பேராசிரியர் சு. மோகனதாஸ், பீடாதிபதிகள், பேராசிரியர்கள், துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள், மாணவர்கள், தமிழ் ஆர்வலர்கள் உட்படப் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

தமிழியலுக்குத் தொண்டாற்றிய மூத்த தமிழ்ப் புலமையாளர்களான திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம் , செல்வி யோகலட்சுமி சோமசுந்தரம், திருமதி புனிதவதியார் சிவக்கொழுந்து, திருமதி மங்கையற்கரசி நடராசா ஆகியோர், அவர்களின் அரும்பணியைப் பாராட்டி, கௌரவிக்கப்பட்டனர்.




இளையதம்பி அரியநாயகத்தின்

# 'உணர்வுகளின் சங்கமம்' கவிதை நூல் வெளியீடு

மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கத்தின் வெளியீட்டில் இளையதம்பி அரியநாயகத்தின் 'உணர்வுகளின் சங்கமம்' கவிதை நூல் வெளியீட்டு விழா ஞாயிற்றுக்கிழமை (31) மட்டக்களப்பு தமிழ்ச் சங்க கட்டடத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சைவப்புரவலர் வி. ரஞ்சிதமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி பாரதி கென்னடி கலந்துகொண்டதுடன் நிகழ்வுக்கு சிறப்பு அதிதியாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி மு. முருகமூர்த்தியும் கௌரவ அதிதியாக கிழக்கு பல்கலைக்கழக மருத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்திய கலாநிதி க.அருளானந்தம் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். குறித்த நூலின் முதல் பிரதியை மட்டக்களப்பு மாநகர சபையின் மேயர் தி.சரவணபவன் பெற்றுக்கொண்டார்.

(தகவலும் படங்களும்: வ. சக்திவேல்)





# அங்குரார்ப்பண நிகழ்வு

சம்மாந்துறை சமூக சேவைகள் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு ஒன்றிய அங்குரார்ப்பண நிகழ்வு, அமைப்பின் தலைவரான பொறியியலாளர் ஏ.சி. பஸீல் தலைமையில், அமைப்பின் தலைமையகத்தில் புதன்கிழமை (03) நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக, சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எம்.எம் நௌசாத் மேலும் கௌரவ அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். எம். ஹனீபா கலந்துகொண்டதுடன், உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், நிர்வாக உத்தியோகத்தர் ஏ.வி சலீம், சமாதான




கற்கைகள் நிலைய பணிப்பாளர் பேராசிரியர் எஸ்.எல் றியாஸ், கிழக்கு மாகாண கணினி தொழில்நுட்ப பேரவையின் பணிப்பாளர் யூ. எல். என் ஹுதா, இளைஞர் சேவை அதிகாரி பைசல் அமீன், இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் அமீர் அப்னான், அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் பேரவை தலைவர் எஸ்.எல். ஜலீல் ஜீ உட்பட உலமாக்கள், வர்த்தக சங்க பிரதிநிதிகள், சம்மாந்துறை சமூக சேவைகள் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு ஒன்றிய நிர்வாகிகள், ஊர் பிரமுகர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

தனது அலுவலக திறப்பு விழாவை முன்னிட்டு, வசதி குறைந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் என்பனவும் வழங்கிவைக்கப்பட்டன.

(தகவலும் படங்களும்: பாறுக் ஷிஹான்)



# நவீன கற்றல் - கற்பித்தலுக்கான பிரவேச நிகழ்வு

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாலிநகர் மகா வித்தியாலயத்தில், நவீன கற்றல் கற்பித்தலுக்கான பிரவேச நிகழ்வு, நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பாலிநகர் மகா வித்தியாலயத்தின் அதிபர் ஸ்ரீ கமலநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், அதிதிகள் வரவேற்பு ம், நவீன கற்றல் கற்பித்தலுக்கான திறப்புவிழாவும் இடம்பெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் மாகாண செயலாளர் வரதீஸ்வரன், மாகாண கல்வி பணிப்பாளர் உதயகுமார் , துணுக்காய் வலயக்கல்வி பணிப்பாளர் மாலினி முகுந்தன், கோட்டக்கல்வி பணிப்பாளர்கள், வலயக்கல்வி பணிப்பாளர்கள் கலந்து சிறப்பித்திருந்தனர்.

(தகவலும் படங்களும்: சுப்பிரமணியம் பாஸ்கரன்)




## டிலாசால் கிட் கெம்பஸ் பாடசாலையின்

# விளையாட்டு விழா

மன்னார், டிலாசால் கிட் கெம்பஸ் பாடசாலையின் 2022 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு நிகழ்வு, பாடசாலை அதிபர் அருட்சகோதரர் ஜோஹன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (31) கிட் கெம்பஸ் பாடசாலையின் மைதானத்தில் நடைபெற்றது. பாடசாலைகள் நீண்ட நாள்கள் நடை பெறாத நிலையில், பாடசாலை சிறுவர்கள் மத்தியில் புத்துணர்ச்சியை ஏற்படுத்தும் முகமாக, குறித்த விளையாட்டு விழா ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தது.

விளையாட்டு நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக அருட் சகோதரர் ஸ்ரனிஸ்லோஸ், அருட்சகோதரர் விஜயதாசன் உட்பட டிலாசால் அருட்சகோதரர்கள் அருட்சகோதரிகள் கலந்து கொண்டனர். வெற்றி பெற்ற சிறுவர்களுக்கு, வெற்றி கிண்ணங்கள், சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டன.

(படங்களும் தகவலும்: லெம்பேர்ட்)



காத்தான்குடி

# காரிகை கலை இலக்கியக் கழகத்தின் கலை நிகழ்வு

காத்தான்குடி பெண்கலை ஆளுமைகளுக்கான காரிகை கலை இலக்கியக் கழகத்தின் கலை நிகழ்வுகள், ஞாயிற்றுக்கிழமை (31) புதிய காத்தான்குடியில் நடைபெற்றன.

காரிகை கலை இலக்கியக் கழகத்தின் ஸ்தாபகத் தலைவியும் நிர்வாக உத்தியோகத்தருமான திருமதி ஜாஹிதா ஜலால்தீன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுகளின் அதிதிகளாக சிரேஷ்ட கலை இலக்கிய ஆளுமைகளான நஸீலா மீரா முகைதீன், றயீஸா நியாஸ், பஹ்மியா ஷரீப், பௌசியா கபூர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மௌலவி எம்.பீ.எம். பாஹிமின் (பலாஹி) இறைவணக்கத்துடன் ஆரம்பமாகிய நிகழ்வுகளில், காரிகை இலக்கியக் கழக செயலாளர் திருமதி ஹாஜறா கலீலூர் ரஹ்மான் ஆசிரியையால் வரவேற்புரையும் ஸ்தாபகத் தலைவி 'இலக்கியச் சுடர்' திருமதி ஜாஹிதா ஜலால்தீனால் தலைமையுரையும் நிகழ்த்தப்பட்டன.

திருமதி. ஜெஸ்மின் றமீஸின் வாழ்த்துக் கவியும், சுட்டிக் குழந்தை நூர் அல்ஹயாவினால் அபிநயப் பாடலும், காரிகை கலை இலக்கிய கழக உபதலைவி திருமதி. அஜீரா கலீல்தீனின் ஓரங்க நாடகமும் மிக சிறப்பாக அரங்கேற்றப்பட்டன.

அத்துடன் திருமதி. எஸ்.எச் சப்ரினாவின் சிறுகதை வாசிப்பு, திருமதி. ஜுஸ்லா றமீஸின் பின் நவீனக் கவிபாடல், ஆசிரியை திருமதி பௌசியா றிசான் நெறியாள்கை செய்த கதம்பம் நிகழ்வும் காரிகை கலை இலக்கிய கழக செயலாளர் திருமதி. ஹாஜறா கலீலுர் ரஹ்மானின் கவிதையும் திருமதி. பௌசானா பிஸ்றுல் ஹாபி ஆசிரியை நெறியாள்கை செய்து மாணவிகளால் இசைக்கப்பட்ட நாட்டார் பாடலும் இடம்பெற்றன.

அதிதிகள் சார்பாக மட்டக்களப்பு மாவட்ட கலாசார உத்தியோகத்தர் மலர்ச் செல்வன் உரையாற்றியதுடன், திருமதி.ஜெஸ்மின் றமீஸ் நன்றியுரை வழங்க, நிகழ்ச்சிகளை திருமதி. முப்லிஹா பிர்தவ்ஸ் ஆசிரியை நெறியாள்கை செய்து, தொகுத்து வழங்கியிருந்தார்.

(தகவலும் படங்களும்: எம்.எஸ்.எம் நூர்தீன்)

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் சனிக்கிழமை 06 ஒகஸ்ட் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.